பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 14 சனிக்கிழமை (30.11.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 346

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பீ.ஜே.பர்னாண்டோ
இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# தனிநாட்டுக் கோரிக்கையை புலிகள் கைவிடத்தயார்!

## பாலசிங்கம் தன்னிடம் கூறியதாக பிரதமர் பாராளுமன்றில் தெரிவிப்பு

(பாராளுமன்ற நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையை முற்றாகக் கைவிட்டுள்ளதாகவும் ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வேயில் வைத்து தன்னிடம் தெரிவித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

கடந்த 25ம்திகதி ஒஸ்லோவில் நடந்து முடிந்த இலங்கைக்கு உதவி வழங்கும் கூட்டத்தில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் விஷேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றிய போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை அவர்களது நிலைபாட்டை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அமைந்துள்ளது.தமிழ் பேசும் மக்களுக்கு உண்மை யான சுயநிர்ணய உரிமை கிடைக்கப்பெறுவது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக தலைவர் பிரபாகரன் கூறியதாக அன்ரன் பாலசிங்கம் என்னிடம் தெரிவித்துள்ளார்.

(02ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பிரதிநிதிகளை கைது செய்யாதது ஏன்?

## கொட்டகதெனியா கேள்வி

(கொழும்பு)

தமிழ்செல்வன், கருணா ஆகியோரை அரசு கைது செய்யாது விடுமானால் சிஹல உறுமய, கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் ஒன்றை நடததும் என்று முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனியா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மகாநாடு ஜாதிக சங்க சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேற்படி பேர்வழிகளை கைது செய்யாமல் விட்டதற்காக பொலிஸ்மா அதிபர்

(10ம்பக்கம் பார்க்க)

# புத்தளம் எம்.பியை கைது செய்க

## பிரதமரிடம்கேட்கிறார் ஜனாதிபதி

(புத்தளம்)

புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிஎம்.பியான ரங்க பண்டாரவை உடனடியாகக் கைது செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவைக் கேட்டுள்ளார்.

புததளம் மாவட்டக் கல்விப் பணிப்பாளரைத் தாக்கியதுடன், சுமார் ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை சேதமாக்கியமைக்காகவும்,

குருநாகலில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றிற்காகஅமைக்கப் பட்டிருந்த பந்தல்களைச சேதப்படுத்தியமைக்காகவும ,அவரைக் கைது செய்யுமாறு ஜனாதிபதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைக கேட்டுள்ளார். (ம)

# தமிழ்ச்செல்வன்-கருணா நேற்று அமைச்சர் ஹக்கீமுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனும்,சிறப்புத் தளபதி கேணல் கருணாவும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் செய்திருந்தது.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இதேவேளை எதிர்வரும் டிசம்பர் 2ம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக சு.ப.தமிழ்ச்செல்வனும் கேணல் கருணாவும் இன்று கொழும்பில் இருந்து விஷேட விமானத்தில் ஒஸ்லோ பயணமாகவுள்ளனர்.(ம)

# அரசியல் இலாபம் பெறுவதற்கு அமைச்சர் மகேஸ்வரன் முயற்சி

## ஈ.பி.டி.பி ஜெகன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நெடுநதீவில் ஏற்படுத்தப்பட்டுள்ள ...

வரப்பட்டிருந்தனர். பத்திரிகையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்

## காணாமல் போனோரின் உறவினர்கள்

# யாழ். செயலகம் முன்பாக

## தென்பகுதி மாணவர்கள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

ஒஸ்லோ பயணமாகவுள்ளனர்.(ம)

# யாழ். செயலகம் முன்பாக 2ந் திகதி மறியற் போர்

(யாழ்ப்பாணம்)

படையினரால் கைதாகிக் காணாமல் போனோர் தொடர்பான விபரங்களைப் பெற்றுத்தருமாறு கோரி நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.செயலகம் முன்பாக மறியற் போராட்டம் நடைபெறவுள்ளது.

1996ஆம்,1997ஆம்ஆண்டு காலப் பகுதிகளில் வட பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் தொடர்பான பூரண விபரங்களைப் பாதுகாப்பு அமைச்சின் செயலரிடமிருந்து பெற்றுத் தருமாறு யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அக் கோரிக்கைகளுக்கு இது வரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கப் பெறாத பட்சத்திலேயே யாழ்.செயலகம் முன்பாக மறியற் போரில் ஈடுபடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை சர்வதேச மனிதவுரிமைகள் தினமான எதிர்வரும்

(10ம்பக்கம் பார்க்க)

# தென்பகுதி மாணவர்கள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

வடக்குத் தெற்கு மாணவர்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும்நோக்கில் தென் பகுதிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் சமாதானச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு நேற்று இரவு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்துள்ளனர் அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தனவின் ஏற்பாட்டில் 22 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 600ற்கும் மேற்பட்ட மாணவர்கள் இச் சுற்றுலாவில் இடம் பெற்றுள்ளனர்

இரண்டு தினங்கள் குடாநாட்டில் தங்கியிருக்கும் இவர்கள் குடாநாட்டுப

(10ம்பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி ஜெகன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நெடுநதீவில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணபதற்கு முயற்சிகள் மேற்கொள்வதற்குப் பதிலாக அமைச்சர் மகேஸ்வரனும்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்களும் செயற்பட்டிருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது.


இவ்வாறு யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) கூறியுள்ளார். நேற்று முன்தினம் பத்திகையாளர்கள அமைச்சர் மகேஸ்வரனால் நெடுந்தீவுக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர். பத்திரிகையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் ஆகியோர் வருகைதரவுள்ளனர் என்ற செய்தி கிடைப்பதற்கு முன்பாக சுமார் 15 பேர் அளவில் மட்டுமே நெடுந்தீவில் உள்ள எமது அலுவலகத்திற்கு அண்மையாகவுள்ள கொட்டகையில் அமர்ந்திருந்தனர்.

எனினும் முக்கியஸ்தர்கள் வருகைதரவுள்ள செய்தி கிடைத்ததும் நெடுந்தீவு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான உழவுஇயநதிரத்தில், கட்டாய அழைப்பின் கீழ் சில நூற்றுக் கணக்கானவர்கள் அங்கு கொண்டு வந்து குவிக்கப்பட்டனர்

(10ம்பக்கம் பார்க்க)



தென்பகுதியில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்த மாணவர்களில் ஒரு பகுதியினரை கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ. கமலநாதன், பிரதி அதிபர் திருமதி. குணரட்ணம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் வரவேற்ற போது... - படம்:கை.ஜெயகாந்தன்.



யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. சிறிக்குமரன் தென்பகுதி மாணவரொருவருக்கு கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

G. C. E. O-L 2003 2004ஆண்டிற்கான மாலை வகுப்புகள் ஆரம்பமாவுள்ளது;ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி வகுப்பில் சிறுதொகை மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். பதிவிற்குதலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறைவீதி யாழ்ப்பாணம்.

(6263)


## கல்வியியற்கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர்களுக்கான நவம்பர்மாதக் கொடுப்பனவு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9,30மணிக்கு கல்லூரி பீடாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

டிசம்பர்மாதம் விடுமுறையாக இருப்பதால் அனைத்து மாணவர்களையும் கல்லூரிக்குவருகைதந்து இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-5)

## சுகாதார வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் நாளை முதல் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை சுகாதார வாரம் அனுட்டிக்கப்படவுள்ளது.

இந்நாட்களில் மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், சுகாதாரவிழிப்புப் படக்காட்சிகளும் காண்பிக்கப்படவுள்ளன.

(உ-7)

# மாற்றுக்கருத்துக்களுக்குமதிப்பளித்து மனங்களைப் புனிதமாக்க வேண்டும்

## என். எம். மரியசேவியர் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே நல்லசகோதரத்துவம் என்றஅடிப்படையில் தமிழ், சிங்கள,முஸ்லிம் பிணைப்பின் மூலம் ஒருசிறிய மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது'

நாம்செல்லும் பாதை நீண்ட நெடும் பாதையாக இருந்தாலும் அதுஒளிவீசுகின்ற பிரகாசமான சமாதானப்பாதையாக அமைய இந்தச்சிறியமெழுகுவர்த்தி வழிகாட்டும் திருமறைகலாமன்றத்தின இயக்குனர் தந்தை அருட்திரு என். எம். மரியசேவியர் நேற்று யாழ் கூட்டுறவுச்சங்க கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற அமைதிக்கான மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்-

அவர்மேலும் தெரிவிக்கையில் வடக்கு தெற்குகலைஞர் இலக்கிய வாதிகளின் சகோதரத்துவக் கலந்துரையாடல் ஒன்றின் மூலமே நல்ல சாத்தியமான வளமான எதிர்காலத்தினை உருவாக்கமுடியும்,

இலங்கையிலே 50ஆண்டு காலமாக ஜனநாயகத்தை பரிசோதனை செய்துபார்த்து விட்டோம் ஆனால் அதில் நாம்தோற்று விட்டோம் இதனால் தான் கலாசாரப் பிணைப்பை ஏற்படுத்த இன்று முயன்றுள்ளோம்-

ஒருவர் மற்றவரோடு தனது கருத்தை தெரிவித்தல், மாற்றுக்கருத்துக்கு இடமளித்தல் மாற்றுக்கருத்தினை செவிமடுப்பதன் மூலமே நாம்நல்ல மனிதர்களாக ஜனநாயக வழியில் வாழமுடியும்-

நாங்கள் மனிதர்களுடைய மனங்களை புனிதம்மிக்கனவாக மாற்றவல்ல கலைஞர்களாக வாழவேண்டும் என்று குறிப்பிட்டார்-

(உ-6,16,7)

## 'வியாபாரம் சமாதானம்' கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர்கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் மற்றும் உபதலைவர் த-சற்குணராசா ஆகியோர் வியாபாரம் சமாதானம் என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் பங்குபற்றும்முகமாக அநுராதபுரம் சென்றுள்ளனர்-

நேற்றும் இன்றும் இடம்பெறும் இக்கருத்தரங்கில் வெளிநாட்டு வர்த்தகர்கள் மற்றும் ஐக்கியநாடுகள், அபிவிருத்திததிட்டப் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்-

(உ-7)

## சமாதானம் வேண்டி கலாசார நிகழ்ச்சி

(கொழும்பு)

'நாட்டு மககள் மத்தியில் நிரந்தர சமாதானம் மலர வேண்டும், என்ற தொனிப்பொருளில் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கலாசாரபரிவர்த்தனநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நாட்டிலுள்ள இனங்களின் மத்தியில புரிந்துணர்வுகளை வளர்க்கும் நோக்கில் வன்னி, மாத்தளை கலாசார பரிவர்த்தன பிரிவுகளின் நிகழ்ச்சி இன்று வவுனியாவிலும் நாளை மன்னாரிலும் நடைபெறவுள்ளது.

வன்னி மாத்தளைபரிவர்த்தன பிரிவினரின் இக்கலாசார நிகழ்ச்சிகளில் உள நாட்டலுவல்கள் மாகாணசபைகள உள்ளூராட்சி அமைச்சர் அலுவிகாரவும் கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-8)

## கலைப்பீட மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு பலகலைக்கழகத்தின் கலைப்பீடமாணவர் சங்கத்தின் தேர்தல் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மேற்படி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கலைப்பீடமாணவர் ஒன்றியத்துக்கான தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த வாரம் நடைபெற இருந்த போதும், இரு மாணவக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

ஆனாலும் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் தேர்தலுக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத்தேர்தலை நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள கோரிக்கை விடுத்துள்ளனர்.

(உ-8)

## யாழ் மாநகரசபை உதைபந்தாட்டஅணி இன்று அநுராதபுரம் செல்கிறது

(சுண்டுக்குளி)

யாழ் மாநகராட்சி மன்ற உதைபந்தாட்ட அணி இன்று அநுராதபுரம் செல்கிறது மாநகராட்சிமன்ற அணிகளிற்கிடையே நாளை ஆரம்பமாகவுள்ள உதைபந்தாட்ட போட்டியில் இவ்அணி பங்குபற்றவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் செல்லும் இவ் அணியில் பா.ஜெயதீஸ் (தலைவர்) எ.சிமியோன் நொலஸ்கோ, வை.சுதாகரன் ஜே.வாஷங்டன், ஆர்.அந்தோனி,எ.சாள்ஸ், எஸ்.மார்லின் பெர்ணான்டோ,வி.விஜயகுமார்,ரி.லெனால்ட், எல். அமில்டஸ், எ.பெல்சின் பி.ஜோன்சன், எ.விஜயகுமார், எ.றொபட்சன், ஜே. ரஜனிகாந் ஆகிய வீரர்கள் இடம்பெறுகின்றனர்.

(த-110)

## தனிநாட்டுக்

அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவும்அரசும் விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வுடன் படிக்கையை பூரணமாக அமுல்செய்வது தொடர்பாகவும் விடுதலைப்புலிகளின் அமைப்புடன எதிர்காலத்தில் அரசுநடத்தவுள்ள பேச்சுவார்த்தையின்போது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும் அரசு உத்தேசித்துள்ளது,

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கையின் சமாதானமுயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும் கூட்டம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகஉள்ளது.

இனப்பிரச்சினை தீர்வில் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்குச் சர்வதேச சமூகம் தமதுமனப்பூர்வமான ஆதரவைவழங்க இம்மாநாட்டில்உறுதியளித்துள்ளதுடன் நிதிஉதவிவழங்கவும் பலநாடுகள்முன்வந்துள்ளது.

ஒஸ்லோவில் நடந்துமுடிந்த மாநாட்டின்பின் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் ஐக்கிய இலங்கையின் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் வகையில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப்பரவலாக்கலை ஏற்றுக்கொள்வதற்கும், தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதற்கும் விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக ஒஸ்லோவில் வைத்து என்னிடம் தெரிவித்தார்என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2003

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும், வேலைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30. 12. 2002ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருட்கள்

01. காகிதாதிகள், எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. மேல் நாட்டு வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மூலிகைகள் மருந்துகள்
05. சீருடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிகள்
06. பாதணிகள், மழைக் கவசம் மற்றும் தோற் பொருட்கள்
07. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க் கடகம் முதலியன
08. சுத்திகரிப்புப் பிரிவுக்கான கிருமி நாசினிகளும், மருந்துகளும்
09. வேலைப்பகுதி/ சுத்திகரிப்புப் பகுதிக்குத் தேவையான மண்வெட்டி, அலவாங்கு, பிக்கான் போன்றன
10. நூலகங்களுக்குரிய நூல்கள்
11. கட்டடப் பொருட்கள (சீமெந்து, கூரைத்தகடு, ஓடுகள் முதலியன)
12. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன
13. கற்கள், மணல்கள
14. வாகன இயந்திர உதிரிப் பாகங்கள், துணை உறுப்புக்கள்
15. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர், ரியூப் முதலியன
16. மின் பொருட்கள்
17. எரிபொருள் உராய்வு நீக்கிகள் கிறிஸ்
18. கணனிகளுக்கான உதிரிப்பாகம், போட்டோப் பிரதி இயந்திரம், றோணியோ இயந்திரம் ஆகிய வற்றுக்கான உதிரிப் பாகங்கள்

### சேவைகள்

01. அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளொக் தயாரித்தல்
05. சீருடை தைத்தல்
06. வாகனங்கள் சேவிஸ் செய்தல்
07. கணனியையும் அதன் உதிரிப் பாகங்களையும் திருத்துதல், சேவிஸ் செய்தல்
08. நிழற்படப் பிரதி இயந்திரம், தொலைநகல்(Fax) என்பவற்றைத் திருத்துதலும், சேவிஸ் செய்தலும்
09. மின்சார உபகரணங்களைத் திருத்துதல்
10. நீரிறைக்கும் இயந்திரம், மின்மோட்டார் திருத்துதல், கைப்பம்பி திருத்துதல்
11. மோட்டார் வாகன ரியூப் ஒட்டுதல்
12. மின்கலங்களுக்கு மீள் வலுவூட்டல்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும். ஆயினும் வேறு இடங்களிலிருந்து கூறுவிலைகள் கோரவும் பிரதேச சபைக்கு உரிமை உண்டு.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள்/ சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

### வேலைகள்

கட்டிடங்கள் நிர்மாணம், பராமரிப்பு, வீதி அமைத்தல், பராமரிப்பு ஆகிய வேலைகளுக்கு ஏற்கனவே பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2003ம் ஆண்டுக்கான தமது பதிவுகளை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் புதுப்பித்துக் கொள்ளவும். அவ்வாறு புதுப்பிக்கத் தவறுபவர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

பொருட்கள் வழங்கல் சேவைகள் விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக 120. 00 (ரூ100 + வற்வரி ரூ20) பெறுமதியான ''தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'' என்ற பெயருக்குப் பெறப்பட்ட காசுக் கட்டளை/ தபாற் கட்டளையை இணைத்து அனுப்ப வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள எமது பிரதேச சபையின் பணிமனையில் நேரடியாகச் செலுத்த முடியும். ஏற்கனவே வேலைகளுக்குப் பதிவு செய்தவர்கள் பதிவினைப் புதுப்பிப்பதற்கு புதுப்பித்தல் கட்டணமாக, இக்ராட் பதிவுப்புத்தகம்வைத்திருப்பவர்கள் ரூ1200.00 (ரூ1000. 00 + வற்வரி ரூ200. 00)ம், இக்ராட் பதிவுப் புத்தகம்இல்லாதவர்கள் ரூபா 600.00(ரூபா500.00 வற்வரி ரூபா100. 00) உம் செலுத்துதல் வேண்டும்.

கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் 'வழங்கல்கள் சேவைகள் 2003ம் ஆண்டு' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 30. 12. 2002ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்' என முகவரியிடப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு வழங்கல் சேவை வேலைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

க. கமலசேகரன், ஜே. பி, யு எம்.
தலைவர்,
வலிகாமம் தெற்கு
பிரதேசசபை, சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு
பிரதேசசபை சுன்னாகம்.
2002. 11. 26.

(C- 5374)

# பிரபாகரனின் உரை சமாதான முயற்சிக்கு முரண்படவில்லை

## அமைச்சர் பீரிஸ் திருப்தி

(கொழும்பு)

**சமாதான முயற்சிகளின் குறிக்கோளுடன் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரை முரண்படவில்லைஇதுவே இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டிய விடயம்-அத்துடன், ஜனாதிபதி குமாரதுங்காவின் ஆதரவுடனேயே இந்தச் சமாதான முயற்சி முன்னெடுக்கப்படும்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுள்ளனர்; ஒரே நாடு என்ற எல்லைக்குள் நின்றவாறு மேற் கொள்ளப்படும் அதிகாரப் பரவலாக்கலையே அவர்கள் விரும்புகின்றனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலே மேற் கண்டவாறுகுறிப்பிட்டார்.

பீரிஸ் மேலும் கூறுகையில்;

அரசாங்கம் நுட்பமான முறையில் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதனாலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் அடிப்படைக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது இந்த விடயத்தில் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் மிகத் தெளிவாகக் காணமுடிகிறது;

இதேவேளை ஒரு நாடு என்ற வரையறைக்குள் தீர்வு காணப்படுமானால் மட்டுமே, உதவிகள் தாராளமாக வழங்கப்படுமென அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் கூறியுள்ளார்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் போதுமான அரசியல் அதிகாரமுடைய சமாதானத் தீர்வுக்குத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளமையானது சமாதான முயற்சிகளுக்கு நம்பிக்கையூட்டுவனவாகவும் ஊக்கமளிப்பவையாகவும் அமைந்திருக்கிறது.

பிரபாகரனின் கடந்தகால மாவீரர் தின உரைகளுக்கும் கடந்த புதனன்று இடம்பெற்ற மாவீரர்தின உரைக்குமிடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. இந்த மாற்றங்கள் தற்செயலாக ஏற்பட்டவையல்ல;

சமாதான முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஜப்பானில் நிதியுதவி மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது இதன் பின்னர் தென்னாபிரிக்காவிலும் நிதியுதவி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு வகுக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கிறது என்று குறிப்பிட்டார். (பீ)

# இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படின் இந்தியாவுக்குப் பல நன்மைகள் உண்டு

## நோர்வே தொழிற்கட்சித் தலைவர் கருத்து

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு நோர்வேயின் பிரதான நான்கு கட்சித் தலைவர்கள் பூரண ஆதரவு தெரிவித்துள்ளனர்;

ஒஸ்லோவில் நோர்வே பாராளுமன்ற சட்டடத் தொகுதியில் இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கென நடத்தப்பட்ட விசேடமாநாட்டிலேயே கட்சித் தலைவர்கள் இவ்வாறு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்;

நோர்வே பாராளுமன்றத்தில் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும், இலங்கையில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானநடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு கிடைக்கும் என்று தெரிவித்துள்ளனர்;

நாட்டின் தற்போதைய சமாதான முயற்சி குறித்து, நோர்வே தொழிற்கட்சியின் தலைவர் ரொபே ஜோன் ஜக்மன் கருத்து தெரிவிக்கையில்;

இலங்கையில் நிரந்தர சமாதானம் மலர்வதே எமது விருப்பமும் நோக்கமும் ஆகும்.

நோர்வே அரசாங்கத்தில் மாற்றங்கள் ஏற்படுவதனால் இந் நோக்கம் எவ்வகையிலும் கைவிடப்பட மாட்டாது.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிரந்தர சமாதானம் ஏற்படுமானால், அதனால் அதன் அயல் நாடான இந்தியாவும் பல நன்மை அடையும் என்று குறிப்பிட்டார்;

மேலும்,இலங்கையின் சமாதானம் குறித்தவிடயத்தில் இலங்கை அரசாங்கத்துடனோ அன்றி தமிழீழ விடுதலைப் புலிகளுடனோ எந்தவித இரகசிய ஒப்பந்தமும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

இருதரப்பினருக்கும் இடையில் கருத்து ஒற்றுமை காணப்பட்டு நிரந்தர சமாதானம் காணவேண்டும் என்பதே நோர்வே மக்கள் அனைவரினதும் அவா ஆகும்.

சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக நோர்வே பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளுக்கும் விளக்கிக் கூறப்படும் எனவும் தொழிற்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்; (உ-8)

# சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக டென்மார்க் 190கோடி நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக டென்மார்க் 190 கோடி ரூபாவை மானிய உதவியாக வழங்க முன் வந்துள்ளது:

அடுத்த மூன்றாண்டுகளுக்குள் இவ் உதவி வழங்கப்படும் என டென்மார்க் தூதரகம் நேற்றுமுன்தினம்வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

அவ் அறிக்கையில் மேலும், 19வருடகால சிவில் யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பம்கிடைத்துள்ளது

ஆகையால்,இலங்கையில் இயல்பு நிலை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குவதற்காக சர்வதேச சமூகம் சமாதான நடவடிக்கைகளுக்கு அரசியல் பொருளாதார உதவிகளை வழங்க வேண்டும்.

கண்ணிவெடிஅகற்றல், புனரமைப்பு,அகதிகள் திரும்பிச் செல்லல்'மனித உரிமைத்திட்டங்கள் ,நல்லிணக்க நடவடிக்கைகள் ,கண்காணிப்புக் குழுவுக்கு உதவுதல் போன்றவற்றுக்காகவே 190 கோடி ரூபா வழங்கப்படவுள்ளது என்றும்,

இதனைவிட அடுத்த இரு ஆண்டுகளுக்குள் 570 கோடி ரூபாவைஇலகுகடனுதவியாக வழங்கவிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான

# தடகளப் போட்டியில் புதிய சாதனை நிகழ்த்திய யாழ்.பல்கலை அணிவீரன்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் மேற்படிபல்கலைக்கழகத்தில் நடைபெற்று முடிந்த இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குஇடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி 9 போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது;

இதேவேளை,5 நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும் 4 நிகழ்ச்சிகளில் மூன்றாம் இடத்தையும் யாழ்.பல்கலைக்கழக அணிபெற்று தனது திறமையை நிரூபித்துள்ளது.

ஆண்கள் பிரிவில் 67 புள்ளிகளும் பெண்கள் பிரிவில் 56 புள்ளிகளுமாக மொத்தம் 123 புள்ளிகளை இப்போட்டியில் இவ் அணி பெற்றுள்ளது;

பேராதனைமற்றும்றுகுணுப் பல்கலைக்கழக அணிகள் தலா 138 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது;

இதே வேளை யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த எஸ். ரஞ்சித்குமார் 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் புதிய சாதனையைப் படைத்துள்ளதுடன், நீளம் பாய்தல், கோலூன்றிப் பாய்தல் போட்டிகளிலும்முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்;

தவிர எஸ்.கிஷோக்குமார் உயரம் பாய்தலிலும் 100 மீற்றர் ஓட்டத்தில் எஸ் ஜெயதீபனும் சி குகாயினி நீளம் பாய்தலிலும்பி.ஜே மதிவதனி 200மீற்றர் ஓட்டத்திலும் முதலாம்இடங்களைப் பெற்றுள்ளனர்.

4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்திலும் யாழ். பல்கலைக்கழகஆண், பெண் அணிகள் இரண்டும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

### கட்டாக்காலிகளை கட்டி வளர்க்குக

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள கால் நடைகளைக் கட்டி வளர்க்குமாறும்,

கட்டி வளர்க்கத் தவறி,கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் எதிர்வரும் 2 ஆம் திகதிக்குப் பின்னர்பிடித்துக்கட்டப்படுவதுடன் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படும் எனவும்சம்பந்தப்பட்ட பகுதி மக்களுக்கு நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. (உ-4)

### நகரவீதிகளில் மின்விளக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் வீதி மின் விளக்குகள் பாவிக்கமுடியாத நிலையில் இருந்துவருகின்றன தற்போதுமின்சாரம் சீராக கிடைப்பதனால் நகரசபைப்பகுதி மற்றும் யாழ். மாவட்டத்தில்உள்ள உபநகர் பகுதிகளிலும் இவ்விளக்குகள் பொருத்தும்பணி ஆரம்பிக்கப்பட உள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பத்மநாதனால் சில உள்ளுராட்சி மன்றங்களிற்கு கடிதம அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ், மாநகரப்பகுதி,சாவகச்சேரி, நெல்லியடி, கரவெட்டி,நல்லூர்,மானிப்பாய் போன்ற நகரப்பகுதிகளிலும் மின்விளக்கு பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் இப்பகுதிகளில் உள்ள உள்ளுராட்சி மன்றங்கள் எவ்வெவ்விடயங்களில் இவை பொருத்தப்பட வேண்டும் என்பதுபற்றி திட்டம்தயாரித்து விரைவில் தனக்கு அனுப்பிவைக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்; (பீ-252)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் கலை விழாவும் இன்று பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி. சிவச்செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தமும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறையின் அத்தியட்சகர் த. செல்வச் சந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## இராசி பலன்

(30. 11. 2002)

(கார்த்திகை 14, சனி)

ஏகாதசி மு.ப இ 10. 29 வரை

அத்தம் மாலை 5.42 வரை

இராகுகாலம்-9.14-10.44,

நல்ல நேரம்- 3.14- 4.44

ஏகாதசி விரதம்

**மேடம்**

தொழில் முயற்சி பலிதம், எடுத்த காரியம் கைகூடும், பகைவர் நேசம், மனமகிழ்ச்சி

**இடபம்**

மனச்சஞ்சலம், சொத்துக்களால் கவலை, காரிய இடையூறு, திடீர் நன்மை.

**மிதுனம்**

தன்னம்பிக்கைக் குறைவு, மாதா சுகம்,முயற்சி தாமதம், ரோக பயம்.

**கடகம்**

இனிய அனுபவம், புதிய பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை, காரிய சித்தி.

**சிங்கம்**

மாதர் நட்பு, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு, கடும் வார்த்தை

**கன்னி**

நண்பர்கள் உதவி, சயன சுகம், முயற்சி கைகூடும் நல்ல முயற்சி.

**துலாம்**

பிதா சிந்தை, மனக் குழப்பம, எடுத்த காரியம் தாமதமாகும், பண விரயம்.

**விருச்சிகம்**

குடும்ப சுகம், கீர்த்தி, செய்தொழில் விருத்தி, உஷ்ண நிலை.

**தனுசு**

சுப நிகழ்ச்சி, நல்ல செய்தி, பிறர் உதவி, தொழில் லாபம்

**மகரம்**

கட்டுப்படுதல், வீண் பயம், உடல் உழைப்பு, காரிய அனுகூலம்.

**கும்பம்**

வாகனபயம்,உடல் சோர்வு' முயற்சி தடங்கல், நண்பர்கள் விரோதம்.

**மீனம்**

பிரயாண சுகம், அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, சத்துரு ஜெயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### ஐவரிக் கோஸ்டில் அரசியல் நெருக்கடி

# கிளர்ச்சிவாதிகள் 2நகரங்களை அதிரடி நடத்தி கைப்பற்றியுள்ளனர்

(அபிட்ஜான்)

ஐவரிக்கோஸ்டில் கிளர்ச்சிவாதிகள் திடீரென 2நகரங்களைக் கைப்பற்றியுள்ளனர். இதனால் அந்நாட்டின் சமாதான முயற்சிகள் முறிவடைந்து பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது.

உலகிலேயே அதிகளவு கொக்கோ பயிரிடும் நாடான ஐவரிக் கோஸ்டில் தற்போது மூன்று பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளது. நாட்டின் தென்பகுதி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும், வடபகுதி கடந்த இரண்டு வருடங்களாகக் கிளர்ச்சி வாதிகளின் பிடியிலும் மேற்குப் பகுதி மற்றுமோர் தீவிரவாதிகளின் பிடியிலும் இருக்கின்றன.

இதனால் ஐவரிக்கோஸ்டில் தளம்பலற்ற ஆட்சி நடத்த முடியாத பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது என்று அந்நாட்டின் ஜனாதிபதி கவலைதெரிவித்துள்ளார்.

தலைநகர் அபிட்ஜானிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் படையினர்மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி லோறன் பெக்போ தற்போது கிளர்ச்சிவாதிகளால் கைப்பற்றப்பட்டுள்ள டனன், ரான் ஆகிய இரு நகரங்களையும் மிக விரைவில் மீட்டெடுக்க வேண்டும் என்று படையினரைக் கேட்டுக் கொண்டார். (பி-2)

### வட–தென் கொரிய

# ரயில் பாதை அமைக்கும் வேலைகள் ஆரம்பம்

(பியோங்யாங்)

வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையிலான ரயில்பாதையை அமைப்பதற்கானமுதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளது.

இது தொடர்பாக காணிகளை அளக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் தொடர்பாக சர்வதேச ரீதியில் சகிப்பு நிலைகள் தொடர்ந்த போதிலும் சாதாரணமாகவே பகையுணர்வுடன் கூடிய வட-தென் கொரியாக்கள் ரயில் பாதை விடயத்தில் இணைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இரு கொரியாக்களுக்கிடையில் 2000ஆம் ஆண்டு இடம் பெற்ற உச்சி மாநாட்டின் போது இரு நாடுகளுக்குமிடையில் ரயில்,பஸ் போக்குவரத்து வீதிகள் அமைப்பதற்கான இணக்கம் காணப்பட்டது. (பி-4)

### ரஷ்யாவில்

# 8 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் எயிட்ஸ் நோய்க்குப் பலியாவர்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் 2010ஆம் ஆண்டு 5லட்சம் பேர் எயிட்ஸ் நோயால் மரணமடைவார்கள் என அந்நாட்டின் எயிட்ஸ்நிபுணர் தகவல் வெளியிட்டுள்ளார்.

ரஷ்யாவில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2லட்சத்து இருபதாயிரம் பேர் என அதிகாரபூர்வ புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டிருந்தாலும், 10லட்சம் பேர் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த இந்நிபுணர் எதிர்வரும் எட்டு ஆண்டுகளில் 5லட்சம் போ எயிட்ஸ்சினால் இறந்துவிடுவார்கள் என்று தெரிவித்துள்ளார். (பி-2)



பாப் இசை உலகில் முன்ன்ணியில் உள்ள மைக்கேல் ஜாக்சனுக்கு, ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில் ‘மிலேனியத்தின் சிறந்த பாடகர்’ விருது வழங்கப்பட்டது. உடன் இருப்பவர் ஹொலிவூட் நடிடை ஹேலி பைரி.

# ஒஸாமாவின் உயிரியல் ஆயுதம் நேச நாடுகளில் பாதுகாப்பு ஏற்பாடு

(ஒட்டாவா)

அமெரிக்காவின் நேசநாடுகள் மீது ஒஸாமாபின்லேடனின் அல்கெயடா இயக்கம் உயிரியல்கரமி ஆயுதங்களைப் பிரயோகிக்கக்கூடும் என்ற பீதி பரவியுள்ளதால் அந்நாடுகள் தமது மக்களை இத்தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அண்மையில் ஒஸாமா பின்லேடனிடமிருந்து வெளியானதாகக் கருதப்பட்ட ஒலி நாடாவே இந்தப் பீதியை கிளப்பிவிட்டிருக்கின்றது.

அமெரிக்காவின் நேச நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, இத்தாலி, ஆவுஸ்திரேலியா ஆகியன ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் திட்டத்திற்கு ஆதரவு வழங்கினால் அவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அந்த ஒலிநாடாவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக கனடா மக்கள் அனைவருக்கும் பெரியம்மை நோய்க் கெதிரான தடுப்பு மருந்தை வழங்கக் கனடா நடவடிக்கை எடுத்துள்ளது.

கனேடிய சுகாதார அமைச்சும் பெரியம்மைத்தடுப்பு மருந்தை விநியோகிக்கவிருக்கும் நிறுவனமும் ஒரு கோடி தடுப்பு மருந்தை வழங்குவதற்கு 10மாதங்கள் எடுக்கும் எனத் தெரிவித்துள்ளன.

பெரியம்மை நோயை உயிரியல் ஆயுதமாக உபயோகிக்கும் சாத்தியக்கூறு மிகவும் குறைவாகவேயுள்ளது என்றும், கனேடியமக்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் பந்தோபஸ்தையும் நிச்சயிப்பதற்கு சகல வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் கனேடிய சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் உறுதியளித்தார்.

அமெரிக்கா ஏற்கனவே கோடிக்கணக்கான பெரியம்மை நோய்த்தடுப்பு மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகளைமேற்கொண்டுள்ளது. (பி-4)



தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்கின் ஏரோக் நகரில் 46ஆயிரத்து 824பேர் ஒரே இடத்தில் கூடி, உலக சாதனை படைத்துள்ளனர். இதில் பிரதமர் தக்சின் ஷின்வாடராவும் கலந்து கொண்டார்.

### சதாம்ஹுசைன் புதிய தந்திரம்

# அழிவாயுதங்களை ஒளித்து வைக்க உத்தரவு

### லண்டன் பத்திரிகை தகவல்

(லண்டன்)

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஆயுதப் பரிசோதகர்களினால் கண்டு பிடிக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் அவற்றைத் தத்தமது வீடுகளில் ஒளித்து வைக்குமாறு சதாம் ஹுசைன் அவரது ஊழியர்களுக்கு உத்தரவு விடுத்துள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரச வட்டாரங்களையும், ஈராக்கிய புலனாய்வு அறிக்கைகளையும் மேற்கோள் காட்டி ரைம்ஸ்; மற்றும் இன்டி பென்ரன் ஆகிய பத்திரிகைகள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

விஞ்ஞானிகள் சிவில் அதிகாரிகள் விவசாயிகள் ஆகியோருக்கு முக்கிய ஆயுதங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களை ஒளித்து வைக்குமாறு ஈராக் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும், இவ்வுத்தரவிற்குக் கீழ்ப்படிய மறுத்தால் கடுமையாகத் தண்டனையை எதிர்நோக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (பி-4)



பயங்கரவாதிகளின் தாக்குதலால் தரைமட்டமாக்கப்பட்ட நியூயார்க் உலக வர்த்தக மைய வளாகத்தில் புதிய மாளிகை ஒன்று கட்டப்பட உள்ளது. 697அடி உயரமும், 52மாடிகளைக் கொண்டும் இந்த மாளிகை அமையும். வரும் 2005ஆம் ஆண்டிற்குள் இதனைக் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வானொலி நிலையம் தாக்கப்பட்டது

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் உயர் இந்திய வானொலி நிலையத்தின் மீது நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலுக்கு பாகிஸ்தானைத் தலைமையாகக் கொண்டியங்கும் அல்-பதா தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

காஷ்மீரின் அமைதியைக் குலைப்பதற்கே இந்தத் தாக்குதல் இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலின் போது வானொலி நிலைய இசை மண்டபம் சேதத்திற்குள்ளாகியது. அத்துடன் உயிர்ச்சேதம் எதும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பி-4)

## காவிரி நீர் ஆணைய கூட்டம் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

புதுடில்லியில் நேற்று மாலை நடைபெறவிருந்த காவிரிநதிநீர் ஆணையக்கூட்டம் முக்கிய உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொளளவிருந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு உடல்நலமின்மை காரணத்தினால் கலந்து கொள்ளவில்லையென்றும், இவருடன் கேரள முதலமைச்சர் ஏ.கே அன்ரனி தவிர்க்கமுடியாத காரணத்தினால் கலந்து கொள்ள முடியவில்லை யென்பதாலும் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று சென்னை மாநில அரச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதி வாரத்தில் அல்லது ஜனவரிமாத முதல் வாரத்தில் நடைபெறும் என்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அர்யுன் சரத்ஷேத்தி அறிவித்துள்ளார். (பி-2)

# மனித உறுப்பு விற்போருக்கு எதிராகஇந்தியாவில்கடும்சட்டம்

(புதுடில்லி)

மனித உறுப்புக்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பதற்குப் புதிய சட்டம் ஒன்றை உருவாக்குவது குறித்து இந்திய அரசு பரிசீலனை மேற்கொள்ளவுள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் சத்ருகன்சிங்ஹா தெரிவித்துள்ளார்.

நேற்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த சத்ருகன்சிங்க மனித உறுப்புக்களை விற்பனை செய்வதைத் தடுக்கும் சட்டம் ஏற்கனவே இருந்து வருகிறது. எனினும் புதிய சட்டம் ஒன்றை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் இந்த சட்டத்தை மீறி மனித உறுப்புக்களை விற்பனை செய்வபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கான சரத்துக்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கும் என்று சிங்க கூறினார். (பி-2)

# பாக்.தூதரகம் இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதத்தைத் தூண்டுகிறது

(புதுடில்லி)

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவிலுள்ள பாகிஸ்தானிய தூதரகம் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளைத் தூண்டிவிடும் மையமாக செயற்படுகின்றது என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யத்வந்சிங்க பாகிஸதான் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று பேட்டி ஒன்றின்போது பதிலளித்த யத்வந்சிங்கா அல்கெய்தாத் தீவிரவாதிகள் பங்களதேஷில் தஞ்சம் புகுந்துள்ளார்கள் என்று தெரிவித்ததுடன் பாகிஸ்தான் டாக்காவிலுள்ள தூதரகம் உட்பட பல தூதரகங்கள் இந்தியாவுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ளார். (பி-2)

# பெருநாட்டில் அரச ஊழியருக்கு சம்பளத்துடன் கட்டாய விடுமுறை

(லிமா)

பெருவில் 7லட்சம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்துடனான கட்டாய விடுமுறைகள் வழங்கப்படவுள்ளன.

மின்சாரம், நீர், மற்றும் தொலைத் தொடர்புக் கட்டணங்களுக்கான செலவை இதன்மூலம் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாக பிரதமர் லூஜிஸ்லாசி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நிதிப்பிரச்சினையை எதிர் நோக்கும் நிலையில் பிரதமரின் இத்திட்டத்திற்கு ஜனாதிபதி அல்லன்ரோ ரொலை டாவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் 16ஆம் திகதி முதல் ஜனவரி 3ஆம் திகதிவரை அரச ஊழியர்களுக்கு சம்பளத்துடனான விடுமுறை வழங்கப்படவுள்ளது. (பி-4)

# இன்று ஒரு தகவல்

## இதய வாசல் திறந்தது

ஒரு பெரியவர்! அவர் ஏழை. அதனால் ஒரு குடிசையில் வாழ்ந்தார். ஒரு நாள் இரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அந்தப் பெரியவரும், அவர் மனைவியும் அந்தக்குடிசைக்குள்ளே தூங்கிக்கொண்டிருந்தார்கள் அந்த நேரம் பார்த்துயாரோ திடீரென்று கதவைத் தட்டுவது மாதிரிச் சத்தம் கேட்டது அந்தப் பெரியவர் விழித்துக்கொண்டார். மனைவியை எழுப்பினார். வெளியே யாரோ வழிப்போக்கர்... நமக்குத் தெரியாத நண்பர் வந்திருக்கிறார் போல் இருக்கிறது... கதவைத் திற என்றார். அதற்கு அந்த அம்மா உள்ளே இடமே இல்லையே எங்களிருவருக்குமே இங்கே இடம் போதாதே. அப்படி இருக்கும் பொழுது இன்னும் ஒரு ஆள் எப்படி உள்ளே இருக்க முடியும்? என்றார்,

அதற்கு அவர் இது ஏழையின் குடிசை இதில் எத்தனை பேர் வந்தாலும் இடம் உண்டு என்றார் நான் யதார்த்தமாகப் பேசுகிறேன். நீங்கள் தத்துவமாகப் பேசுகிறீர்களே என்றார் அந்த அம்மா அதற்கு மறுபடியும் அவர் சொன்னார். மனதிலே இடம் இருந்தால், இந்தக் குடிசையையே, அரண்மனை மாதிரி நம்மாலே உணரமுடியும். உள்ளம் குறுகியிருந்தால் ஒரு பெரிய அரண்மனை கூட சிறிதாகத் தான் தெரியும்.

நமது வீட்டுவாசல் தேடி வந்திருக்கிற ஒரு மனிதனை எப்படி நாம் போ என்று சொல்ல முடியும்? இதுவரைக்கும் இந்தக் குடிசையில் நாம் இரண்டுபேர் படுத்திருந்தோம் இந்த இடத்திலே நிச்சயமாக மூன்று பேர் படுக்க முடியாது. ஆனால் குறைந்தது மூன்று பேர் உட்காரலாம். அதனால் நாம் எல்லோரும் உட்கார்ந்தால் இன்னும் ஒரு ஆளுக்கு இங்கே இடம் கிடைக்கும் என்றார். அந்த அம்மா கதவைத் திறந்தார். அந்த ஆள் உடம்பு முழுவதும் நனைந்து போய் நின்று கொண்டிருந்தான்.

கதவைத் திறந்ததும் உள்ளே வந்தான். மூன்று பேரும் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து இன்னும் இருவர் வந்து கதவைத் தட்டினார்கள். உடனே அந்தப் பெரியவர் 'வேறு யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது போய்க் கதவைத் திறவுங்கள்' என்றார். கொஞ்ச நேரத்திற்கு முன்பு உள்ளே வந்த ஆசாமி 'கதவைத் திறப்பதா? இங்கே இடமே இல்லையே' என்றான் கொஞ்ச நேரத்துக்கு முன்னர் இவன் வெளியில் நின்று கொண்டிருந்தான்; இந்தப் பெரியவர் மனதினாலேதான், நமக்கு உள்ளே இடம் கிடைத்தது என்பதை மறந்து விட்டான், 'எதற்கு கதவைத் திறக்க வேண்டுமா? வேண்டாமே' என்றான்.

'அன்புதான் உங்களுக்கு இடம் கொடுத்தது. அந்த அன்பு இன்னமும் இருக்கிறது அது உங்களோடு முடிந்து போகவில்லை தயவு செய்து கதவைத்திறந்து விடுங்கள். நாம் இப்போது கொஞ்சம் விலகித்தானே உட்கார்ந்திருக்கிறோம். இனிமேல் கொஞ்சம் நெருங்கி உட்காரலாம். சரியாய்ப் போய் விடும்' என்றார் அந்தப் பெரியவர். கதவைத் திறந்தார்கள். அந்த இரண்டு பேரும் உள்ளே வந்தார்கள் ஒருவழியாகச் சமாளித்து உட்கார்ந்து கொண்டார்கள்.

கொஞ்ச நேரம் ஆனது அப்போது ஒரு கழுதை வந்து நின்று கொண்டு கதவைத் தலையால் முட்டியது. உடம்பு பூராவும் நனைந்து குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது இப்போது அந்தப் பெரியவர் கதவு ஓரமாக உட்கார்ந்திருந்த ஆளிடம் 'கதவைத் திறவுங்கள். யாரோ ஒரு புது நண்பர் வந்திருக்கிறார்!' என்றார்; அந்த ஆள் வெளியே எட்டிப் பார்த்து விட்டு, இது கழுதை, அதற்காக நாம் திறந்துவிட வேண்டியதில்லை என்றான்;

இங்கே மிருகங்களைக் கூட மனிதராக நடத்தித்தான் எனக்கு பழக்கம். தயவு பண்ணித் திறந்து விடுங்கள் என்றார். 'இடம் எங்கேயிருக்கிறது? என்று எல்லோரும் கத்தினார்கள். அதற்கு அவர் சொன்னார். இங்கே நிறைய இடம் இருக்கிறது. உட்காருவதற்குப் பதிலாக எல்லோரும் எழுந்து நிற்கலாம், கவலைப் படாதீர்கள் அப்படித்தேவைப் பட்டால் நான் வெளியிலே இருந்துகொள்கிறேன் என்றார். 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? என்றார் திருவள்ளுவர். அது இதுதான் வாழ்க்கையில் அமைதியான நேரம் எது தெரியுமா? எந்த விதமான நிபந்தனைகளும் இல்லாமல் அன்பு செலுத்துகின்ற நேரம் இருக்கிறது பாருங்கள் அதைவிட அமைதியான நேரம் வேறு எதுவும் இல்லை என்றார் ஒரு பெரியவர் (ஓஷோ)

நமது ஆள் ஒருவன்: எங்கள் வீட்டிற்கு அடிக்கடி விருந்தினர்கள் வருவதுஉண்டுசார் எவ்வளவு விருந்தாளி வந்தாலும் கதவைத் திறந்து விட்டு விட்டு மரியாதையாக நான் வெளியிலேயே போய் விடுவேன் சார்! என்றான், 'ஏன் அப்படிச் செய்கிறாய்' என்று கேட்டேன். நான் வீட்டுக்குள் இருந்தால் அவர்களுக்குச் சாப்பாடு வேறு போடவேண்டியிருக்குமே அதனால் தான் வெளியில் போய்விடுகிறேன்' என்றான்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# சோதனைச் சாவடி மீது கைக்குண்டு வீச்சு

### ஊர்காவல் படைவீரர்கள் காயம்

(கொழும்பு)

மாத்தளை கண்டிபிரதான வீதியில் பல்கடுவசோதனைச் சாவடிமீது நேற்றுமுன்தினம் கைக்குண்டுத்தாக்குதல்இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் ஊர்காவல் படைவீரர்கள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்;

கண்டிநோக்கிச் சென்று கொண்டிருந்த வான்ஒன்றிலிருந்தே இக்கைக்குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் மாத்தளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்;

இதுதொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (உ-4)

## முக்கூட்டுமா

### எடுத்து வருகை

(சுதுமலை)

வைத்திய சாலைகளில் எதிர்வரும் மாதத்தில் விநியோகிப்பதற்கான ஒரு தொகுதி முக்கூட்டுமா கொழும்பில் இருந்து லொறி மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது. (உ-252

# அரச ஊழியர் எண்ணிக்கையை 30 வீதத்தால் குறைக்க வேண்டும்

## திஸ்ஸ தெய்வேந்திர ச. ஆ. கு. யோசனை

(கொழும்பு)

திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழு சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது பற்றி பாராளுமன்றமே முடிவுசெய்யவேண்டும் என்று நிதியமைச்சர் கே. என். சொக்ஸி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில யோசனைகளை அமுல் செய்தால் அது பாரதூரமான பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

அரசாங்க ஊழியர்களின் தொகையை 30 சதவீதம் குறைக்க வேண்டும் என்று திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழு யோசனை கூறியிருக்கின்றது.

இவ்வாறு செய்வதன் மூலம் 1 லட்சத்து 50 ஆயிரம் அரச ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டியிருக்கும்.

எனவே, இந்த ஆணைக்குழு மாற்று யோசனைகளைத் தெரிவிக்கவில்லை.

வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பதிலாக அந்தப் பதவிகளை ரத்து செய்து விடுமாறு திஸ்ஸ தெய்வேந்திர சம்பள ஆணைக்குழு யோசனை கூறியுளது.

ஓய்வு பெறுவோரின் பதவிகளை நிரப்புவதற்கு 5 வருட காலம் எவரையும் நியமிக்க வேண்டாம் என்றும் இது சுட்டிக்காட்டியுள்ளதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுளது. (உ-4)

# கிழக்கு மாகாணத்திற்கு தனியான ஆளுநர் நியமனம்; ஜனாதிபதி விரைவில் தீர்மானிப்பார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திற்குத் தனியான ஆளுநர் ஒருவரை நியமிக்குமாறு தேசிய அமைப்புப்பேரவைவிடுத்தகோரிக்கை தொடர்பாக அரசியல் யாப்பிற்கமைவாகவும், அரசியல் நிலைமைகளைக் கருத்திற் கொண்டும் இறுதித் தீர்மானமொன்றையெடுக்கவிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கா தெரிவித்துள்ளார்;

தேசிய அமைப்புப் பிரதிநிதிகள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்களப்பாராளுமன்றக்குழு உட்பட 21அமைப்புக்களின பிரதிநிதிகள் இது குறித்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியுள்ளனர்;

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்குப்பின் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணம் தற்போது அவசர காலச்சட்டம் இல்லாததன் காரணமாக தனித்தனியாகப் பிரிக்கப்படுவது அவசியம்

இதனால் கிழக்கு மாகாணத்திற்கு தனியான ஆளுநர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று 21 அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்; (உ- 4)

## கொமிசியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மறை மாவட்ட புனித-மரியாயின் சேனையின் கொமிசியக் கூட்டம் நாளை ஞயிற்றுக்கிழமை மு. ப. 10 மணிக்கு தலைவர் சகோதரர் எம் ஏ. பிரகாசராசா தலைமையில் யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது; (உ)

## வடமாகாண ஆசிரியர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் சங்க செயற்குழுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

ஆசிரியர் எதிர் நோக்கும் பிரச்சினைகள், 1999ம்ஆண்டு நடைபெற்ற அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி வெட்டுப்புள்ளிக்கு ஆண்மைப்புளளிகள் எடுத்தோர் நேர்முகப்பரீட்சைக்கு சென்று இன்னமும நியமனக் கடிதமபெறாதோர் பற்றிய பிரச்சினைகள் இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன. (பி)

## அபிவிருத்தி நிதி பெற விண்ணப்பிக்கலாம்

(சுதுமலை)

வலிகாமம தென்மேற்கு பிரதேச சபைக்குள் இயங்கும் 84 சனசமூக நிலையங்களில் 34 சனசமூக நிலையங்களின் விபரங்கள் மாத்திரமே இவ்வாண்டுக்கான அபிவிருத்தி நிதியைப் பெறுவதற்கேற்ற பதிவுகளை மேற்கொண்டிருப்பதாக சம்பந்தப்பட்ட பிரதேசசபையின் உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்துள்ளார்;

இதேவேளை, ஏனைய 50 சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினரை இது விடயத்தில் அக்கறை எடுத்து அபிவிருத்தி நிதியைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (உ-252)

# சமாதான முயற்சிகளுக்கு பிரான்ஸ் ஆதரவு

(கொழும்பு)

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொண்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை பிரான்ஸ் முழுமனதுடன் வரவேற்றுள்ளது.

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொண்டபின் பிரான்ஸ் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அவ் அறிக்கையில் இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்போது மேற்கொண்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பிரான்ஸ் தனது முழு ஆதரவையும் தெரிவித்துளளது;

அத்துடன் பிரான்ஸ் இலங்கைக்கு வழங்கவுள்ள உதவி மனிதாபிமான அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# புலிகளின் பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணத்திட்டம் 2003 முதல் அமுலாகும்

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசங்களிலும் அடுத்த வருடம் முதல் சமுர்த்தி திட்டம் செயல்படுத்தப்படும் என சமுர்த்தி அமைச்சர்எஸ். பி. திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்

சமுர்த்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பாராளுமன்றத்தில் இதனை தெரிவித்துள்ளார்;

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் ஆலோசனைக்கு ஏற்ப வன்னிப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்துக்கு ஏற்கனவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை முழுமையான அளவில் செயற்படுத்துவதற்காக அப்பிரதேசங்களில் நிலவும் சமுர்த்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது சமுர்த்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டுவரும் நிதியை பன்முகப்படுத்தப்பட்டவரவு- செலவுத்திட்டத்தின் கீழ் 25 சதவீதமாக குறைப்பு செய்யுமாறு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையை தவறுதலாக புரிந்துகொண்டு, சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் தொகையை அரசு 25 சதவீதத்தால் குறைப்பு செய்துள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (உ-8)

## இறுதிப் பரீட்சை

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்பு பொதுக்கலைப் பட்டதாரிகளுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான அனுமதியட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளிவாரிப்பரீட்சைகள் உதவிப்பதிவாளர் காமினி விஜயகோன் அறிவித்துள்ளார். (உ-3)

# இருகட்சி அணுகுமுறையே இன்றைய இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தேவை

## அமைச்சர் மிலிந்த மொறகொட

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளில் ஜனாதிபதியையும் ஈடுபடுத்தும் வகையில் இருகட்சி அணுகுமுறையை பிரதமரின் முன்முயற்சியின்படி அரசாங்கம் முன்னெடுக்கவிருக்கிறது, இருகட்சிஅணுகுமுறையே இன்றைய தேவை

லலித் அத்துலத் முதலி ஞாபகார்த்தச் சொற்பொழிவை பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நிகழ்த்திய அமைச்சர் மிலிந்த மொறகொட இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சமாதான நடவடிக்கைகள் வெறுமனே அரசியற் கட்சி விவகாரங்களல்ல இவ்விடயத்திற்கு ஒரு பொது உடன்பாடு ஏற்பட வேண்டும். இதனால் இவ்விவகாரங்கள் தொடர்பாகபிரதமர் ஜனாதிபதியுடன் விரிவான உரையாடல்களை நடத்துவார்.

200 மில்லியன் டொலர்கள் வரையானசெலவில்நிறைவேற்றப்பட வேண்டிய மீள்குடியமர்வு போன்ற முக்கிய விடயங்கள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

வடபகுதியில் கணிசமான பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும். மிகப்பெரும் சவாலாக சட்ட அமுலாக்கம் இருக்கிறது

நாட்டின் ஒருபகுதி மக்கள் தாம் இந்தநாட்டிற்கு சொந்தமானவர்களல்ல என்று நினைக்கும் வரையில் நாடு பிளவுபட்டு நிற்கிறது என்பதே அர்த்தம். இதனால் நம்பிக்கையை மனங்களில் ஏற்படுத்துவது அவசரம் என்றுபிரதமர் கூறுகிறார்.

இன்றைய சமாதான முயற்சிகள் பிளவடைந்துள்ள இந்த நாட்டை ஐக்கியப்படுத்தும் என்று நம்புகிறேன். தவறான போக்குகள் பலவற்றினால் வேறுபட்டுச் சிதறிக் கிடக்கும். நாம் எம்மை ஒரு சமூகம் என்று அழைப்பதில் அர்த்தமில்லை. சமாதானத்திற்கு மக்களாணை பெற்ற நாம் இப்பொழுது அந்தப் பாதையில் மூன்றில் ஒரு பகுதியை அடைந்துள்ளோம். என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ)

## போலி ஆவணங்கள் அச்சிடும் நிலையம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மகரஹமவில் கடந்த 20 வருடங்களாக போலி ஆவணங்களை அச்சிட்டு வந்த நிலையமொன்றினை பாணந்துறை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந் நிலையத்தில் போலி அடையாள அட்டைகள், சாரதிஅனுமதிப்பத்திரங்கள், கல்விச் சான்றிதழ்கள், விசா அனுமதிப்பத்திரங்கள், என்பன அச்சிடப்பட்டுவந்ததாக தெரிய வந்துள்ளது.

சுமார் 20 ஆயிரம் போலி ஆவணப்பத்திரங்கள் அதனை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் என்பவற்றினையும் இங்கிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், இந் நிலையத்தின் உரிமையாளர் உட்பட 6 பேரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

# பிரபாவின் மாவீரர் தின உரை முஸ்லிம் மக்களை ஏமாற்றிவிட்டது

## அமைச்சர் ஹக்கீம் ஆதங்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் உரையில் முஸ்லிம் மக்களின் நிலைபற்றி எதுவும் குறிப்பிடப்படாதது குறித்துமுஸ்லிம்மக்களின் அரசியல்தலைமை பெரிதாக அலட்டிக்கொள்ளவேண்டியஅவசியமில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் பேட்டியளிக்கையில்; மாவீரர் தின உரையில் வடக்குக்கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் நிலைபற்றி ஏதாவது குறிப்பிடப்படுமென சாதாரண முஸ்லிம் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

அது பற்றி எதுவும் குறிப்பிடப் படாதது அவர்களது மனத்தை ஆழமாகப் பாதித்துள்ளது.

மாவீரர் தினஉரையில்தமது நிலைபற்றி பிரபாகரன்என்ன கூறப் போகிறார் என்பது பற்றிமுஸ்லிம்மக்கள் ஆவலாக இருந்திருப்பார்கள் என்பது குறித்து புலிகளின் தலைமை எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டது என்றும் அவர்கூறினார்.

(த)

# அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகளின் நீதிமன்றம் இயங்கவில்லை

## பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நீதிமன்றங்கள் இயங்குவது குறித்து ஆராய்ந்து பிரதமர் ரணிலுக்கு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்கவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஆராயும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட பிரதேசங்களில்உள்ள உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கும், பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பிரதிப்பொலிஸ்மா அதிபர் நிமல்குண திலக்கவுக்கும் இதுகுறித்து அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாகவும் பொலிஸ்மாஅதிபர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இதேவேளை புலிகளின் நீதிமன்றங்கள் கிழக்குமாகாணத்தில் கட்டுப்பாடற்றபிரதேசங்களில் இயங்குவதாகவும், மட்டக்களப்பிலிருந்து 15 கிலோமீற்றர் தெற்கில் இந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டிருப்பதாகத் தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் பொலிஸ்மாஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார்;

எவ்வாறாயினும் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நீதிமன்றங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இல்லையென்று பொலிஸ்மாஅதிபர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் புலிகளின் நீதிமன்றங்கள் இயங்குகின்றனவா என்பதை ஆராய்ந்து அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறு பிரதமர் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-4)

## பண்ணைப் பாலமூடாக பாரிய வள்ளங்களில் நீண்ட தூர மீன்பிடி

(சண்டிலிப்பாய்)

நீண்ட காலமாக பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பண்ணைப் பாலத்தினூடாக மீன்பிடி வள்ளங்கள் சென்று வருவதற்குத் தற்போது படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனால் பாரிய வள்ளங்களில் நீண்டதூரம் சென்று மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது;

(உ-258)

## வடக்கு- கிழக்கில் 199 பாடசாலைகளின் கட்டடங்கள் தரை மட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் சுமார் 23 ஆயிரம் மாணவர்கள் தளபாடங்களின்றி கல்வி கற்று வருவதாக யுனிசெவ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்மூலம் தெரிய வந்துள்ளது;

இதேவேளை கடந்தகால யுத்த நடவடிக்கையினால்199 பாடசாலைக் கட்டடங்கள் தரை மட்டமாக்கப்பட்டுள்ளதாகவும்,

321 பாடசாலைகளின்வகுப்பறைகள் தற்காலிகக் கொட்டில்களில் இயங்கி வருவதாகவும் யுனிசெவ் நிறுவன ஆய்வு மூலம்தெரியவந்துள்ளது(உ-4)

## 1000 பேருக்கு நோர்வேயில் விரைவில் வேலை வாய்ப்பு

### 50 ஆயிரம் முதல் 3 இலட்சம் வரை ஊதியம்

(கொழும்பு)

நாடு பூராகவுள்ள ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு நோர்வே அரசாங்கம் கணனித்துறை மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்துறை என்பவற்றில் உடனடியாக வாய்ப்புக்களை வழங்கவுள்ளது.

நோர்வே அரச பிரதிநிதி, தொழிற்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் இதற்கான உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மேற்படி வேலைவாய்ப்பிற்குத் தெரிவு செய்யப்படுவோர் மாதாந்த ஊதியமாக 50 ஆயிரம் ரூபா முதல் 3 இலட்சம்வரை பெறக்கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

(உ)

## குடாநாட்டில் புதிதாக 6 இடங்களுக்கு நாளைமுதல் மின்சார விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இதுவரைகாலமும் மின்சாரம் வழங்கப்படாதிருந்த ஆறு இடங்களுக்கு நாளைமுதல் மின்விநியோகம் இடம்பெறவுள்ளது.

இம் மின்விநியோகங்களை இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

அராலி தெற்கு அளவெட்டி உரும்பிராய், நிலாவரை, புத்தூர், நீர்வேலி ஆகிய இடங்களுக்கே நாளைமுதல் மின் விநியோகிக்கப்படவுள்ளது;

(உ-3,6,16)

## இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் கைது

(கொழும்பு)

பெறுமதிவாய்ந்த தங்கமாலை யொன்றைக் கொள்ளையிடுவதற்காக 53 வயதுப் பெண்ணொருவரைக் கொலை செய்த இராணுவத்தில்இருந்து தப்பியோடிய நபர் ஒருவரை மாத்தளை விசேடப் பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்;

இவர் கடந்தவாரம் ஒலிகந்த கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருவரைக் கொலை செய்து விட்டு தங்கமாலையை அபகரித்துக் கொண்டு தப்பியோடி அனுராதபுரம் திலிப்பான கிராமத்தில் மறைந்திருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

(உ-4)

## புலிகளின் வைப்பகங்கள் தமிழரைக் கவர்ந்துள்ளன

### சனல் நியூஏஷியா இணையத்தளம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தமிழீழவைப்பகம் தமிழ்மக்களைப் பெரிதும் கவர்ந்துவருகின்றதுஎன சனல்நியூஏஷியா என்ற இணையத்தளம்தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடபாகத்தில் மிகவும் பிரபல்யம்பெற்ற வங்கியாக தமிழீழ வைப்பகம் இயங்கிவருகிறதுஎனவும்,

மக்களின் நலன்களைப் பொருட்படுத்தி இந்த வங்கிகள் செயற்பட்டு வருவதாலேயே தமிழ்மக்களிடம் இது மிகவும் பிரபல்யம்பெற்று வருவதாகவும், மிகவும் குறுகிய காலத்தில் இவ்வங்கி இதுவரை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதாகவும் அவ் இணையத்தளம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

(உ-4)

## விமானக் கொள்வனவு ஆவணங்கள் மீட்பு

(கொழும்பு)

இலங்கை விமானப் படையினருக்கான விமானக்கொள்வனவில் இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பாகப்புலன் விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் விமானக் கொள்வனவு தொடர்பான ஆவணங்களைக் கைப்பற்றியுள்ளனர்:

கடந்த சில வருடங்களில் 22 உலங்கு வானூர்திகள், 3விமானங்கள் கொள்வனவுதொடர்பில் இடம் பெற்றதாகக் கருதப்படும் முறைகேடுகள் தொடர்பாகவே குற்றப்புலனாய்வுப்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்;

இது தொடர்பில் விமானப் படை உயரதிகாரிகள் சிலரை அடுத்த வாரம் விசாரணைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்:

(த)

## காக்கைதீவுக் கடலில் இரவு பகல் மீன்பிடி

(ஆனைக்கோட்டை)

காக்கைதீவுக் கடலில் இரவிலும் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது;

இதனால் காக்கைதீவுதுறைமுகம் ஊடாக சாவல்கட்டு, ஆனைக்கோட்டை, அராலி, நவாலி போன்ற இடங்களைச் சேர்ந்த சுமார் 600 மீனவர்கள் இரவு, பகல் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்:

(உ-20)

## விளையாட்டுத்துறை அமைச்சு செயலராக கே. தியாகலிங்கம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக இலங்கை நிருவாகசேவை சிரேஷ்ட அதிகாரியான கே. தியாகலிங்கம் மாகாண ஆளுநர் அசோகா ஜயவர்த்தனாவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்;

(உ-3)

# மீண்டும் கிளர்ச்சியில் குதிக்க ஜே.வி.பி திட்டம்

**த சனடே ரைம்ஸ் பத்திரிகையில் அண்மையில் வெளிவந்த அரசியல் விமர்சனத்தின் சுருக்கம் - தமிழில்: எஸ். சுந்தர்**

ஜனதா விமுக்தி பெரமுன மீண்டும் வன்முறைச் செயற்பாடுகளில் இறங்கப்போகிறதா? இந் நாட்களில் இவ்வாறான கேள்விகளைப்பலர்கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். 1971இல் ஒரு முறையும் 1987இல் இன்னொரு முறையும் தோல்வியில் முடிந்த இரண்டு ஆயுதப்போராட்டங்களை ஜே.வி.பி நடத்தியது. பின்னர் ஜனநாயக முறையைக் கைகொள்ளப்போவதாகவும் மீண்டும் வன்முறையில் இறங்கப் போவதில்லையென்றும் அது அறிவித்திருந்தது.

ஆனால் இன்று நாட்டில் உருவாகிவரும் நிலைமைகள் ஜே.வி.பியை வித்தியாசமான தோற்றத்தில் காட்டத்தொடங்கியுள்ளன.

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் அனுரா திஸாநாயக்கா அண்மையில் தொலைக்காட்சியில் தோன்றி தமது கட்சி யு.என்.பியினர் கூறுவது போல் வன்முறைகளில் ஈடுபடவில்லையென்று மறுத்தார்.மக்கள் மத்தியில் தமது கட்சிக்கு ஏற்பட்டு வரும் செல்வாக்கைக்கண்டு மிரண்டு போய் யு.என்.பியினர் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறார்கள் என்று அவர் கூறினார்.

ஆனால் வன்முறையில் ஈடுபடுவதில்லையென்ற ஜே.வி.பியின் வாக்குறுதியை அனேகமான யு.என்.பியினர் நம்பத்தயாராயில்லை.

1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து நடத்திய வன்செயல்களின் மூலம் நாட்டைஸ்தம்பிக்கச் செய்யுமளவிற்கு ஜே.வி.பி நடந்து கொண்டது. அந்த ஒப்பந்தம் இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவு கொண்டு வரும் நோக்கில் செய்து கொள்ளப்பட்டது.

மீண்டும் இப்பொழுது இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கண்டு பிடிக்கும் நிலையில் அரசு தயாராகிறது. எனவே ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு எதிர்ப்பைக் காட்டி வரும் ஜே.வி.பி மீண்டும் முன்போலவே சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு வன்முறைகளைத் தூண்டிவிடக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

சமீப காலத்தில் நாட்டில் நிகழ்ந்துள்ள பல்வேறு வன்செயல்களும் இனிவரப்போகிற இன்னொரு ஜே.வி.பியின் ஆயுதக்கிளர்ச்சிக்கு கட்டியங் கூறுபவையாக் இருக்கலாம் என்று பலர் கருதுகிறார்கள்.

வலல்லாவிட்ட பிரதேச சபைத் தலைவர்கொலை, ஜயவாத்தனபுர பல்கலைக்கழக மாணவர் கொலை, வலஸ்முல்ல என்ற இடத்தில் தோட்டத் தொழிற்சாலைப் போராட்டத்தில பொலிஸார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு ஆகியவற்றுக்கு ஜனதா விமுக்தி பெரமுன மீதே ஐக்கிய தேசியக்கட்சியினர் குற்றஞ் சாட்டி வருகிறார்கள்.

இவை அனைத்தையும் ஜே.வி.பியின் செயலாளர் விமல் வீரவன்ச மறுத்துள்ளார். அதே சமயம் கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஒரு கொலையில் சம்பந்தப்பட்டிருந்தால் முழுக்கட்சியுமே அதனைச் செய்யததாகக் கூறுவது சரியல்ல .வென்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜயவர்த்தன புரபல்கலைக் கழக சம்பவத்தைப் பொறுத்தவரை மாணவர் சமுதாயத்தில் 95வீதமானவர்கள் ஜே.வி.பி சார்பு மாணவர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் கூறுகிறார்கள்.

ஜே.வி.பி என்ன தான் மறுத்தாலும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு அதனுடையது தான்என்பதை இன்றுள்ள நிலைமையில் மறுக்க முடியாது. ஜே.வி.பியை எவ்வாறேனும் நசுக்கிவிடவே ஐக்கிய தேசிய முன்னணி விரும்புகின்றது. ஏனென்றால் எஸ்எல் எ ப் பி யின் பின்னணியின் உந்து சக்தியாகவே இருந்து வருகின்றது. மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அல்லது மக்கள் முன்னணி பதவிக்கு வருவதற்கு ஜே.வி.பியின் உதவிப் பலத்தை விரும்பும் அதேசமயம் இவ்விரண்டையும் அரசியல் அந்தகாரத்தில் தள்ளிவிட்டு தன்னை உயர்த்திக் கொள்ளும் திட்டத்துடனேயே ஜேவி.பி செயல்பட்டு வருகிறது.

எனவே தான் ஐக்கிய தேசிய முன்னணி ஜே.வி.பி பற்றி மிக



**இனப்பிரச்சினைத் தீர்வைக் குழப்பும் முயற்சி இது**

ஆழமாக ச்சிந்திப்பதாகத் தெரிகின்றது. ஸ்திரமாக அரசை நிலைநாட்டவும் தொடர்ந்து பதவியிலிருக்கவும் முதல்கட்டமாக ஜே.வி.பியை ஒழித்துக்கட்ட அது நினைப்பது இயற்கையே. இதேசமயம் தனது கடந்த கால வரலாறு எதுவாய் இருந்தாலும் தொடர்ந்து பொது அரசியல் நீரோட்டத்தில் நிலைத்து நிற்பதாயின் ஜே.வி.பியினர் தாம் சுத்தமானவர்கள் என்பதை மக்கள் முன் வெளிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

### பல்கலைகளில்

இதேசமயம் பல்கலைக்கழகங்களில் அரசியல் சித்தாந்தங்களினால் அமைதியின்மை ஏற்பட்டு வருவதையிட்டு பெரும்பாலான மக்கள் கவலையடைந்துள்ளனர். அரசியலைக் கல்வி நிலையங்களில் இருந்து ஒழித்துக்கட்டும்படி அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றனர்.

தம் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்றே பெற்றார் விரும்புகின்றனர். அரசியலில் அவர்கள் ஈடுபடுவதை பெற்றார் விரும்பவில்லை. கல்வியை முடித்த பின்னரே இவர்கள் அரசியலில் இறங்குவது பற்றி யோசிக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் முன்னரும் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. ஆனால் அவை மாணவர் கழகங்களால் தமது வசதிக் குறைவு முதலியவை தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடந்துள்ளன. ஆனால் இப்பொழுது தான் முதன்முறையாக சக மாணவர்களால் ஒரு மாணவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

எமதுசமூகத்தில் ஒழுக்கம் என்பது மிக மோசமான நிலைக்குத் தள ளப்பட்டு விட்டது. படித்தவர்களும் கூட மற்ற மனிதர்களின் உயிரைப் பற்றிக்கவலைப் படுகிறார்களில்லை. இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவு காணவேண்டுமானால் எமது பல்கலைக்கழகங்களின் நிலைமை பற்றி நுணுக்கமாக ஆராயப்பட வேண்டியது அவசியம்.

பல்கலைக்கழகங்களில் கூட வகுப்பு அல்லது வர்க்க வித்தியாசங்களைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. மாணவர்களில் ஒரு பகுதியினர் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவும், ஆளும் வர்க்கத்தினராகவும் நில உரிமையாளர் வர்க்கத்தினராகவுமுள்ளனர். இவர்களுடன் நாட்டின் பல்வேறு பின்தங்கிய கிராமியப்புறங்களிலிருந்து வரும் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் படிக்கிறார்கள்.

ஆங்கில அறிவு போதாமை பட்டம் பெற்ற பிறகும் தேவைப்படும் தரங்களுக்கு உயரமுடியாமை போன்றவை இவர்களை விரக்திக்குள்ளாக்குகின்றது.

இங்கு தான் ஜே.வி.பி பற்றிய உண்மை வெளிப்படுகின்றது. இந்த சமூக சமத்துவமின்மையை ஒழித்துக்கட்டுவதாக அவர்கள் கூறும் கோட்பாடுகள் இவர்கள் மத்தியில் எடுபடுகின்றது. இவ்வித தத்துவபோதனைகளால் ஈர்க்கப்படும் இளைஞர்கள் வன்செயல்களில் இறங்குகிறார்கள். மேலும் புதிதாக வரும் மாணவர்களைப் பகிடி வதைகள் செய்து நெருக்குவதன் மூலமும் ஜே.வி.பி சார்பு மாணவர்கள் அவர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்கிறார்கள்.

### ஜே.வி.பியின் சக்தி

சமூக சமத்துவமின்மையில் தான் ஜே.வி.பியின் சக்தி தங்கியுள்ளது. இளைஞர் அமைதியின்மைக்குக் காரணமாகவுள்ள சமூக சமத்துவமின்மையை ஒழிப்பதன்மூலம் அரசாங்கத்தால் ஜே.வி.பியின் சக்தியைக் குலைக்க முடியும்.

மிதவாதிகளும் பாரம்பரிய இடது சாரிக்கட்சிகளும் பரிதாபகரமாகத் தங்கள் போராட்டங்களில் தோல்வியுற்றமையால் அந்த இடத்தை ஜே.வி.பி யினர் இலகுவாகப்பிடித்துக் கொண்டு விட்டனர்.

அரசியல் தலைவர்களை மனித தெய்வங்களாக மதிப்பதற்கு நமது மக்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். முன்னேற்றத்திற்கு அரசியல் மிக முக்கியமாக தேவைப்படுகின்றது என அவர்கள் நம்புகிறார்கள்.

திருமண வைபவமாக அல்லது மரணவீடாகவிருக்கட்டும், அரசியல்வாதிகளின் வரவு அந்தக்குடும்பத்துக்கு அந்தஸ்தைக் கொடுப்பதாகக் கருதப்படுகின்றது.

இப்பொழுது எரிமலை வெடித்து ஒரு கல்விக்கழகத்தில் ஒரு மாணவனின் மரணத்தில் அது முடிவுற்றுள்ளது. இந்த நிலைமையைச் சமாளிக்க மாணவர்களுக்கென சில ஒழுக்க வரையறைகள் இருக்க வேண்டும். தண்டனை வழங்கக்கூடியதான சட்டங்களாக அவை அமையலாம். பல்கலைகழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் நடவடிக்கைகள் கவலை தருவனவாகவுள்ளன. வன்செயலகளின் மூலம் அதிகாரிகளைத் தனது தாளத்துக்கு ஆட வேண்டும் என்று அது எதிர்பார்க்கின்றது. எனவே பல்கலைக்கழகங்களிலிருந்து அரசியல் அகற்றப்பட வேண்டுமென்பதை இது காட்டுகிறது. இது மாணவர்களின் உரிமைகளில் கை வைப்பதாகவிருந்தாலும் மாணவர் சமூகத்தின் முழு நலனுக்காக இதைச் செய்வது நல்லதென்றே தோன்றுகின்றது.

இவைகளுக்கிடையில் ஜனாதிபதி குமாரதுங்க தாம் பதவியிலிருந்த எட்டாண்டு பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக நாட்டுக்கு அவர் விடுத்துள்ள செய்தி வந்திருக்கின்றது.

சமீப காலத்தில் அவர் நிகழ்த்தியுள்ள மூன்றாவது உரையாகும் இது. முதலில் ஒரு வருட காலத்துக்குள் அரசாங்கத்தைப் பதவியிலிருந்து இறக்க மாட்டேன் என்றார். பின்னர் 19 வது திருத்தச்சட்டம் உச்சநீதி மன்றினால் நிராகரிக்கப்பட்டதையடுத்து தேசிய நல்லிணக்கத்திற்கும் இணைந்து வாழ்வதற்குமான அழைப்பொன்றை விடுத்தார். மூன்றாவது தமது எட்டு ஆண்டுகாலப் பதவியைக் குறிக்குமுகமாக உரை நிகழ்த்தியுள்ளார்.

வாக்காளர்களின் மனோநிலையை அறிந்து கொள்வதற்காகவும் தனக்குச் சாதகமான காலம் எதுவென்பதையும் கண்டறிவதற்காகவுமே இந்த உரைகளின் உள்நோக்கம் என்று கருதப்படுகின்றது. தன்னிடமுள்ள எல்லாவசதிகளையும் பாவித்து அரசாங்கத்தின் தற்போதைய முயற்சிகளை முறியடிப்பதே அவரது நோக்கமாகக் கருதப்படுகின்றது.

இந்த வகையில் அவருக்கு உதவி செய்ய ஜே.வி.பி இருக்கிறது. ஏற்கனவே அரசாங்கத்தின் அமைதி முயற்சிக்கு எதிராக ஜே.வி.பி நாடுதழுவிய இயக்கமொன்றை ஆரம்பித்து விட்டது. அமைதி முயற்சியை எவ்வளவு முடியுமோஅவ்வளவுக்கு அரசாங்கத்து மாறாகப் பிரசாரம் செய்ய ஜே.வி.பி முயன்று வருகின்றது. ஜே.வி.பி யின் இந்த முயற்சி ஜனாதிபதிக்கே சாதகமாக இருக்கப் போகின்றது. (பி)

## ஓய்வு,தியம் 3ஆம் திகதி

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறுபவர்களின் டிசம்பர் மாத ஓய்வூதியத்தை டிசம்பர் மாதம் 3ஆம் திகதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஓய்வூதியப் பணிப்பாளரை பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் கேட்டுள்ளார். (உ)

## மனித உரிமைகள் ஆ. கு .தலைவர் இன்று வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொப்ட்ரி குணதிலக தலைமையிலான மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகள் அறுவர் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டு இங்குவரும் இவர்கள் இன்று யாழ். அரச அதிபர் மற்றும் வடபகுதியில் கைதாகிக் காணமற் போனோர் சங்க அங்கத்தவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் ஆகியோரைச்சந்தித்து மனித உரிமைகள்பேணப்படும் விதம் குறித் ஆராயவுள்ளனர்.

இக்குழு, பலாலி இராணுவத்தளபதி மற்றும் விடுதலைப் புலி உறுப்பினர்களைச் சந்தித்து இது விடயமாக கலந்துரையாடவுள்ளதுடன், உயர் பாதுகாப்பு வலயங்களையும் பார்வையிடவுள்ளது. (உ-16,6)

திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில்

## இளம் தலைமுறையின் வளம் நோக்கிய கொடிவாரம்

(யாழ்ப்பாணம்)

இளம் தலைமுறையின் மேம்பாடு கருதி, இம் மாதம் 28ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம 3ஆம திகதி வரையான நாட்களை இளையோர் உருவாக்கல் கொடிவாரமாக திருமறைக் கலாமன்றம அனுஷ்டிக்கிறது.

இளைஞர்களின் ஆற்றல்களை இனம் காண்போம் எம் கரம் இணைத்து அவர்களுடன் ஒரு புது உலகை அமைப்போம் என்ற தொனிப்பொருளை முன் வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இக் கொடிவாரம் இலங்கை முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது. (உ)

## பல்கலை மாணவி மீது படையினர் கெடுபிடி

*மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு*

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவி ஒருவரால் முகமாலைச் சோதனைச் சாவடியில் தன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட கெடுபிடிகள் தொடர்பாக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ப.தர்மினி என்ற மேற்படி மாணவி தனது முறைப்பபாட்டில் கடந்த செவ்வாயன்று வவுனியாவில் இருந்த யாழப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை முகமாலைச் சோதனைச் சாவடியில் நின்ற படையினர் சுமார் 30நிமிடங்கள் மறித்து வைத்து தான் கொண்டு வந்த பொருட்களைத் துருவித் துருவி ஆராய்ந்ததாகவும், தேசிய அடையாள அட்டையைப் பறித்தெடுத்ததுடன் தன்னை மிரட்டியதாகவும் தெரிவித்துள்ளார். (உ-06,16)



கொழும்பு அர்ச்சனா திரை அச்சுப் பயிற்சி நிலையத்தில் திரை அச்சுக்கலை பயின்ற மாணவர்களையும், அவர்களுக்குப் போதனாசிரியராகக் கடமையாற்றிய தென்னிந்தியாவைச் சேர்ந்தஅச்சுக்கலைநிபுணர் ஆர்.பரதன் முன்வரிசையில் நடுவே அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

குறிப்பு: 29.11.2002 அன்று வெளியான விஞ்ஞானப்பாடத்திற்கான விடைகள் நாளை வெளிவரும்.

# உடல் உழைப்பு, கற்பனை வளத்தை முதலீடாக்கி உயர் வருவாய் பெற உதவும் திரைஅச்சுக்கலை

அச்சுக்கலையில் விஞ்ஞானமும், அறிவியலும் புகுந்து அதன் வளர்ச்சியின் வேகத்தை இன்றைய சூழலில் அனைவரும் பார்க்கலாம். ஆனால் அதிக முதலீடு செய்து தான் அனைத்து அச்சு இயந்திரமும் வாங்க வேண்டும்.

இயந்திரத்தின் மூலம்ஆகிதங்களிலும் போர்டுகளிலும் தான்பிரிண்டிங் செய்யமுடியும் அத்தோடு இயந்திரம் மூலம் செய்வதால் நிர்வாகச் செலவும், பராமரிப்பு செலவும்அதிகம் எத்தனையோ விலை உயர்ந்த இயந்திரங்களால்பல பிரிண்டிங் செய்தாலும், கைவழி முறையில் செய்தவை காண்போரை கவர்ந்து இழுக்கும். மிகவும் சிறிய இடத்தில் நமது உடல் உழைப்பையும் கற்பனைச்சக்தியையும்பெரும் முதலீடாக வைத்து ஒருகுடும்பத்திற்கு தேவையான வருவாயை ஈட்டக் கூடிய அருமையான கலை இந்தத் திரை அச்சுக்கலை. இந்த தொழிலை நான் முறையாகப் படித்து இன்று 18 வருடமாக செய்து வருகிறேன். நான் பெற்ற கலை என்னை தன்னிறைவு அடைய வைத்துக் கொண்டிருக்கிறது. என்னோடு இது மடிந்துபோவதை விரும்பாத நான், அர்ச்சனா அகடமி ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சிநிலையம்என்ற ஒன்றை நிறுவியுள்ளேன். பலர் படித்துப் பயன் பெற்று மிகப் பெரிய தொழில் அதிபர்களாக இருக்கின்றனர். இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் இக்கல்விகற்ற மாணவர்கள் தாங்கள்செய்தபிரிண்டிங் வேலைகளை என்னிடம் இன்றும்கொண்டுவந்துகாட்டுகிறார்கள். அது பெருமையளிக்கிறது.

### தொழிலின் சிறப்பம்சம்

இந்த தொழில் மூலம் எந்த பொருட்களிலும் எப்படிப்பட்ட ஒரு எழுத்தையோ, படத்தையோ, நாம்விரும்பும் வர்ணத்தைச் செலுத்தி பிரிண்டிங் செய்யலாம். இதற்கு ஓவியம் தீட்ட அதிகம் படித்திருக்க வேண்டும். கல்வியறிவு அதிகம் வேண்டும் கம்பியூட்டர் படித்திருக்கவேண்டும் என்ற தேவையே இல்லை.

இன்று உலக அரங்கில் திருமண அழைப்பிதழில் முன்னணியில் இருக்கும் இந்திய நிறுவனங்கள் பல, அவை அனைத்தும் உழைப்பை மட்டுமே மூலதனமாக வைத்து முன்னேறியவை.

இந்தத் தொழிலை ஒருவர் முறையாகக் கற்று இதன் நுணுக்கங்களை தெளிவாக அறிந்தால் மட்டுமே இதில் அதிக வருவாய் ஈட்டுவதும் இடையூறு இன்றி தொழில் செய்வதும் முடியும். இந்தத் தொழிலை வீட்டில் வைத்து செய்யலாம். இன்றுவியாபார ரீதியில் எத்தனையோ வகையானஸ்ரிக்கர்திருமண அழைப்பிதழ்கள்,வாழ்த்து அட்டைகள்,விசிட்டிங் காட்,லெட்டர் பாட்,என்வலப்,பில் புத்தகம் நோட்டிஸ் போஸ்டர், லேபிள் முதலியன காண்போரை கவர்ந்திழுக்கும் அளவில் பிரிண்ட்செய்யலாம், இது மட்டுமல்லாமல் தகரம், பிளாஸ்டிக் போர்டு, ஸ்கூல் பாட்ஜ், டை, கண்ணாடி,

**ஆர். பரதன்**
**தென் தமிழகம்**

சி.டி, ஓடியோ கேசட், ரெக்ஸின், வெல்வெட் முதலியனவற்றிலும் பிரிண்டிங் செய்யலாம், துணிவகைகள், பேனா, ரி-சேர்ட் முதலியனவற்றில் அழகாகப் பிரின்செய்யலாம்.

### கொழும்பில் பயிற்சி

குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து செய்யக்கூடிய தொழில்களில் இதுவும் முக்கியமான ஒரு தொழில்வருவாய் அதிகம் ஈட்டக்கூடிய தொழில் கிராமங்களிலும் இதனை எளிதாகச் செய்யலாம். இது முதலீடுகுறைந்த தொழில்என்பதை மனதில் கொள்ளாமல் விரும்பிச்செய்யும் மனோபக்குவம் இருந்தால் இதில் வெற்றிநிச்சயம் நான் இந்தியாவிலிருந்துவந்து கொழும்பில் பல மாணவர்களுக்கு பயிற்சி அளித்து இருக்கிறேன். அதிகமான மாணவர்களும் மாணவிகளும் பயின்று பலர் தொழில்செய்தும் வருகின்றனர். பலர் வெளிநாடுகளில் வேலையும் செய்கின்றனர். ஓய்வுநேரங்களில் சிலர் இதனைசெய்கின்றனர்.

### யாழ். மக்கள்

யாழ். நகரமக்களுக்கும்இதனைப்பரப்பவேண்டும். அவர்கள் கல்வியும், அறிவும் இயற்கையாக பெற்றவர்களாதலால் நான் சொல்லிக்கொடுக்கும் 10 மடங்கு கல்வியை 100 மடங்காக ஆக்கும் வல்லமை பெற்றவர்கள் என்பதைஅறிந்துள்ளேன். எனது மூன்று ஆண்டுகால கனவு இன்று நனவாகிஉள்ளது. முதல்கட்ட வகுப்பில் 25 மாணவர்கள் பயிற்சிபெற்று இரண்டாம் கட்ட வகுப்பில் 30 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இதனை முழுமையாகக் கற்றுக்கொள்ள நீங்கள்பலஇடம் செல்ல வேண்டும். ஆனால் நான் பல விஷயங்களை ஒரே இடத்தில் அதுவும் உங்கள் நாட்டில் வந்து கற்றுத் தருவதால் கலையில்ஆர்வம் உள்ளவர்களும் கலை பயிலும் மாணவ, மாணவியரும், வேலை இல்லாமல் இருப்பவரும் இந்த பயிற்சியின் முக்கியத்துவம் அறிந்தவர்களும் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

இதன் பயனையும், இதன் சிறப்பையும், இந்த தொழில் மூலம் செய்த வேலைகளையும் பற்றிய முழு விளக்கமும் முதலில் தரப்படும்.

பின்பு இதன் பயன் அறிந்து இந்த பயிற்சியில் சேரலாம். ஒருவர் வாழ்வில் உயரவும் சமுதாயத்தில் வாழவும், கல்வியும், அறிவும் தொழில் கல்வியும் இன்றியமையாதது என்பது யாமறிந்த உண்மை.

## பிரபாவின் மாவீரர் தின உரை

# சமாதான அணுகுமுறையின் கீழான புலிகளின் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளது

## ஆய்வாளர்கள் அபிப்பிரயாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் கடந்த புதனன்று ஆற்றிய மாவீரர் தின உரை அவரது அனுபவ முதிர்ச்சியை கோடிட்டுக் காட்டுகிறது.

உலகப் போக்குடன் முரண்படாது உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன் நகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே என்று மேற்படி மாவீரர் தின உரையின் ஆரம்பத்தில் பிரபாகரன் குறிப்பிட்டிருப்பது குறித்து ஆய்வாளர்கள் இவ்வாறு கருத்துக் கூறியுள்ளனர்,

எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போராட்ட அணுகுமுறையை மீளாய்வு செய்வர் என்பதையும்,

சமாதான அணுகுமுறையின் கீழான புலிகளின் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க அரசின் நேர்மைத் துணிவுமிக்க செயற்பாடுகளையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, நோர்வே அரசு ஆகியவற்றின் செயற்பாடுகளையும் அவர் மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

இதேவேளை, இனவாதிகளை இனம்கண்டு ஒழிப்பதுடன் சமாதானத் தீர்வுக்கு முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டும். தமிழர் தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியைநிறுவி எம்மைநாமே ஆள தடையாக இருக்கக் கூடாது; எமது மக்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அல்லது பிரிந்து செல்வதா என்பது சிங்கள அரசியல் கட்சிகளின் போக்கில் தங்கியிருப்பதாக கூறியிருப்பதை சிங்கள மக்களுக்கு விடுத்த முக்கிய செய்தியாகக் கொள்ள முடியும்.

தவிர. பெரும்நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் உலகத்தின் நல்லாசியுடனும் நடந்துவரும் சமாதானப் பேச்சுக்களை சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பியடித்தால் அது தமிழ் மக்களை தனியரசுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்று குறிப்பிட்டிருப்பது சிங்கள பேரினவாதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள அறை கூவலாகும் என்று ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ)

# இலங்கைக்கு எதிராக பிறநாடுகள் சதி புரிகின்றன

## ஜே. வி. பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரானசதித்திட்டத்தில் வெளிநாட்டுச் சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

மக்கள் விடுதலைமுன்னணி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்றஇலங்கைக்கு உதவிவழங்கும் மாநாடு தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தையும் தமிழீழத்துக்கான நிதியையும் மாத்திரமே வழங்கியுள்ளது.

இம்மாநாட்டின் மூலம் வழங்கப்படும் நிதியுதவிகள் வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் நிலவும் குறைகளை நிவர்த்தி செய்வதற்குமாத்திரமே பயன்படுத்தப்படவேண்டும்என்று உதவி வழங்கும்நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தேவைகளுக்கேற்ப இந்நிதியைப் பயன்படுத்த வேண்டும் என்பதனாலேயே இம்மாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளும் கலந்து கொள்ள வேண்டும்என நோர்வேஉட்பட மேற்குநாடுகள் முடிவுசெய்ததாக இச்செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ-8)

# மிருசுவில் படுகொலை சந்தேக நபர்கள் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

மிருசுவில் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் 8பேரின் படுகொலைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அனுராதபுரம் கஜபாகு இராணுவப் படைபிரிவின் 5 இராணுவத்தினரும்பிணையில்விடுக்கப் பட்டுள்ளனர்.

கடந்தபுதனன்று கொழும்பு மேல்நீதிமன்ற நிதிபதி எஸ். ஐ.இமாம் தலைமையிலான மூன்று நீதிபதிகளை கொண்ட ரயல் அட்பார் 5 இராணுவத்தினருக்கும் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

இராணுவத்தினர் ஒவ்வொருவரும் தலா 8 லட்சம் ரூபா சரீரப்பிணையிலும்6லட்சம்ரூபா பெறுமதியானஇரு ஆட்பிணைகளிலும் மற்றும் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது, சாட்சியங்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது ஒவ்வொரு மாத இறுதியின் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் புலனாய்வுப் பிரிவினர் முன்னிலையில் ஆஜராக வேண்டும் என்ற உத்தரவுகளும் இடப்பட்டுள்ளன.

இவ்வழக்கு விசாரணை அடுத்த வருடம் ஜனவரிமாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (உ-8)

## சுமார் 5 இலட்சம் பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த (சா. த) பரீட்சைக்கு 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் தோற்றவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 800 பரீட்சை நிலையங்களில் நடைபெறும் இப்பரீட்சைகள் யாவும் எதிர் வரும் 13 ஆம் திகதி முடிவடையும். (உ-8)

# வடக்கு -தெற்கு இளம் விரிவுரையாளர்கள் நட்புறவு நிகழ்ச்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-தெற்கு இளம் விரிவுரையாளர் நட்புறவுப்பாலம் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து9 இளம் விரிவுரையாளர்கள் உட்பட 12 விரிவுரையாளர்கள் யாழ்.பல்கலைக் கழகத்திற்கு 4 நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று வந்துள்ளனர்.

இளம்விரிவுரையாளர் களை சிறந்த ஆளுமை மிக்கவர்களாக உருவாக்குவதும், இருபக்க விரிவுரையாளர்களுக்கு இடையே பரஸ்பரம்ஒற்றுமை புரிந்துணர்வுச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதுமே இவர்களின் யாழ். வருகையின் முக்கிய நோக்கமாகவுள்ளது.

கொழும்பு பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் யோக வாசநாயகம், சமூகவியல் பேராசிரியர் செட்டிக்கே, அபிவிருத்திக் கல்விப் பேராசிரியர் கலாநிதி மாக்ஸ் மேபர் தலைமையில் 9 இளம் விரிவுரையாளர்கள் இவ்விதம் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, வறுமை, சமூக ஒருமைப்பாடு ஆகிய தொனிப்பொருள்களில் இன்று இரு தரப்பு விரிவுரையாளர்களும் யாழ். பல்கலைக் கழகத்தில் கருத்துரைகளை நிகழ்த்தவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் எவரும் இதில் பங்கேற்று பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# மக்கள்வங்கிக்கிளைகளிலும் அடகு நகைகள் மீளளிப்பு

மக்கள் வங்கியில் நகை அடகு வைத்து தமது நகைகளை மீளப்பெறுவதற்குப் பணம் கட்டியவர்களின் அடகு நகைகள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் பணம் கட்டியவர்களுடைய நகைகளே இவ்விதம் கொண்டுவரப்பட்டுள்ளன.

எனவே, அடகு நகைகளுக்காகப் பணம் கட்டியவர்கள் தமது நகைகளை அந்தந்தக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம் என மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஊர்காவற்றுறை கிளைக்குரியவர்கள் தமது அடகு நகைகளை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

எப்பொருள் யார் யார்
வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு

குறள்

# சைவமும் தமிழும் தழைத்தோங்க உழைத்திட்ட

# பெரும் வள்ளல் சேர் பொன். இராமநாதன்

சிவபூமியெனத் திருமூலரால் போற்றப்பட்ட பூமியாழ் பூமியாகும். பலஅருளாளர்கள் யாழ்மண்தெய்வமணம், பக்தி மணம் கமழும்சிவபூமியென்று போற்றினா. இத்தகையமண்ணில் வானழயடி வாழையாக கல்விமான்கள், அருளாளர்கள், ஞானிகள் சைவத்தை மூச்சாகவும் தமிழைப் பேச்சாகவும்கொண்டு வாழ்ந்தார்கள்.

### தோற்றம்

சோழநாட்டில்சைவம்குன்றி சமண சமயம் ஆக்கிரமித்த போது, வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க திருஞான சம்பந்த சுவாமிகள் அவதாரம் செய்தார். அதுபோல ஈழத்தில்அந்நியர் ஆட்சி வலுப்பெற்ற காலத்தில் மானிப்பாயில் வாழ்ந்த பொன்னம்பலம்முதலியாரும் அவர் துணைவியும் இராமேஸ்வரப்பெருமானைப் பிரார்த்தனை செய்து சேர் பொன் இராமநாதனைஈன்று தந்தனர்.

'தமிழன் என்றொரு இனமுண்டு,தனியேஅவர்க்கொரு குணமுண்டெடன்றாங்கு' இராமநாதன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய், மதிநுட்பம விவேகம் பரோபகாரம் யாவும் பொருந்தபரமனடியே சிந்திக்கும்வள்ளலாய்இந்து மக்களின் நித்திலம் போவறு வளர்ந்து கல்வி, கேள்வி, ஞானங்களிற் சிறந்து விளங்கினார்.

இராமநாதன் தமது கல்வியின் முற்பகுதியை உள்நாட்டிலும், மேற்படிப்பை இந்தியாவின் இராசதானிக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

கல்விக்கும் அதன் ஆற்றல் பயன்பாடு முதலியனவற்றிற்கும் ஐம்பெரும் குரவர்களின் ஆசியும் வாழ்த்தும் வேண்டும் அதனால் இராமநாதன் முதலில் அன்னையும்பிதாவும்முன்னறி தெய்வமென்றாங்குபெற்றோரை நாள் தோறும்வணங்கத் தவறுவதில்லை.

பின்னர் சிவயோக சுவாமிகளின்குருநாதன் செல்லப்பாச் சுவாமிகளை வணங்கினார். இராமநாதன் அவர்களின் பயபக்தி பணிவுமுதலியவற்றைக் கண்ட சுவாமிகள் 'நீபெரிய ஆள்' என வாழ்த்தி 'விசிறி' ஒன்று அளித்து நல்லூரானை நாளும் வலம் வந்து வணங்கென ஊக்கம் கொடுத்தார்.

### அரசியல்துறை

ஈழம் 15ஆம் நூற்றாண்டின் முன் இயற்கை எழில் மிக்க வளம்செறிந்த பொன்கொழிக்கும் நாடாக இருந்தது. இக்காலங்களில் ஈழநாட்டை அக்கால அரசர்கள், சிங்களம், தமிழ் என ஆண்டு வந்தனர். கி.பி 3 ஆம் நூற்றாண்டின் முன் ஈழம் தனித் தமிழாக இருந்தமைக்குப் போதிய சான்றுகள் உண்டு. அதன்பின்னர் ஏதோ ஒரு காரணத்தால் சிங்கள மொழியும், புத்த மதமும்திணிக்கப்படினும்ஒன்றையொன்று தழுவனமைக்கு, இலங்கையின் நாற்புறமும் காணப்படும்ஈசுவரங்கள் உதாரணமாகவுள்ளன. பாக்கு வியாபாரத்திற்காக வந்த அரபியமுஸ்லிம்கள்தமதுமதத்தை பெலவீனமடைந்த மக்களிடையே திணித்தனர்.

## மாதாஜி

### மேலைநாட்டினர் ஆதிக்கம்

14 ம் 15 ம் நூற்றாண்டளவில் சிங்கள அரசர்களிடையே உள்நாட்டுக்கலகங்கள் உண்டாயின. 1505 இல் போர்த்துக் கேயர் வியாபாரத்திற்காக ஈழம் வந்தனர். தொடர்ந்து17ம் நூற்றாண்டு ஆங்கிலேயர்கள் (பிரித்தானியர்கள்) வந்தார்கள். உள்நாட்டுக்கலகத்தில் பிரித்தானியர் தலையிட்டு இலங்கை முழுவதையும் தமது ஆட்சிக்குக்கீழ்கொண்டு வந்து, இலங்கைவாழ் மூவினத்தையும் அடிமையாக்கினார்கள்.

இக்காலத்தில் தான் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவம தமிழ்ப்பாரம்பரியம் கலாசாரம் என்பவற்றைக் கட்டிக்காக்க, சேர்பொன் இராமநாதன்அவர்களைசட்டசபைக்குத்தெரிந்தனுப்பினார்.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்றஅப்பர்சுவாமிகளின் அருள் மொழியைத் தன் இளமைப்பருவத்தில் தனக்காக்கிக்கொண்டபெருமனார் இராமநாதன், அரசியல், கல்வி, சமயம், பொருளாதாரம் கலை, கலாசாரம் ஆகிய பணிகளே மக்களிடையே நிலைநாட்டி, மக்களின் குறைபாடுகளை நீக்கத் தமதுஆளுமைத்திறனைஆத்மசாந்தியுடன் வலுவாககிக் கொண்டார்.

இராமநாதன் அவர்கள் 1870 இல் சட்டசபையில் நியமனம் பெற்று 1930ம் ஆண்டு வரை சட்டசபையை அலங்கரித்தார். இராமநாதன் 80 ஆண்டுகள் பூதவுடலுடன் வாழ்ந்தார். 50 ஆண்டுகளை ஈழமக்களின் சுபீட்ச வாழ்விற்காகச் சட்டசபையிலிருந்து, சேவை செய்தார்.

மக்களுக்கு இன்றியமையாதபோக்குவரத்துவசதிகள், தானியவரி ஒழிப்பு, தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசன அபிவிருத்தி விவசாய அபிவிருத்தி ஆகியன வற்றை வெள்ளையருடன் வாதாடிநடைமுறைப் படுத்தினார். காங்கேசன் துறைமுகம் போன்ற துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தினார்.

### ஆன்மீகமும் கல்வித்துறையும்

அரசின் அடாவடித்தனத்தால், ஈழத் தமிழ்மக்கள்பெரிதும் துன்பமடைவதைக்காண்கின்றோமல்லவா? இன்று உள்நாட்டுஅரசியற் குழப்பமாக வெடிக்க இனமதமொழிகள் காரணமாகும். ஆனால் இராமநாதன் கால ஆட்சி பிரித்தானியர் என்று கூறப்படும் அந்நியரின் ஆட்சியாகும்.

சேர்பொன் இராமநாதன் கல்வி கற்கும் காலத்தில் சட்டத்துறைக் கல்வியைச் சிறப்பான கல்வியாகக் கொண்டாலும்,ஆத்மீக ஞானமும்,ஆன்மீக நேயமும், மனிதப் பிறவியின் சிறப்பு நோக்கப்பயனும் அளிக்கின்ற ஞான நூல்களாகிய தேவாகமங்கள், சைவ சித்தாந்தங்கள்திருமுறைகள், இதிகாசங்கள், புராணங்கள் அருளாளர்களின் நூல்களை நன்குதெளிந்து விரிவாகவும் விளக்கமாகவும் கற்றார். அதனால் அந்நூல்கள்காட்டும் ஞானயோக நெறி அனுஷ்டானங்களை நாள்தோறும் அனுட்டித்து வந்தார்.

அக்காலத்தில் ஆங்கிலேயரின் கல்வியில் மோகம் கொண்ட தமிழ் ஈழவாசிகள் வெள்ளையரின் பண்பாடுகளில் மூழ்கிய போது சேர் பொன் இராமநாதன் துணுக்குற்றார். இதனால் பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியாக இராமநாதன் கல்லூரியும், பரமேஸ்வராக் கல்லூரியும் அமைத்துச் சைவத்தமிழ்ப் பண்பாடு முதலாகத் தமிழ், சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம் முதலியவற்றை மாணவர்கள பயில வைத்தார்.

பெண்கல்விக்கு முதலிடம் கொடுத்து சைவ சமய ஒழுக்காற்றுடன், கல்வி கற்கச் செய்தார்.

ஆங்கிலேயரின் ஆட்சியின் பலனால் சைவசமயம்ஒளிகுன்றத் தொடங்கியது. இதனால் 1892ல் சைவ பரிபாலனசபை நிறுவுவதற்குதூண்டு கோலாகவும் உறுதுணையாகவும் இருந்தார். அக்காலத்தில் சைவ அனாதைச் சிறுவர்கள் கிறிஸ்தவ மத விடுதியில் சேர்ந்து கல்வி கற்றனர். இதனைத் தடுக்க,சைவ விருத்திச் சங்கம் நிறுவிபாடசாலைகள், அனாதை விடுதிகள் நிறுவினார்.

''கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்.''

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''

என்ற அருள் மொழிகளைச் சிரமேற் கொண்டு இராமநாதன்கல்லூரியில் இராமேஸ்வரர் ஆலயமும், பரமேஸ்வராக் கல்லூரியில் பரமேஸ்வரர் ஆலயமும், நிறுவி வேத ஆகம விதிப்படி அந்தணர்களைக் கொண்டு நித்திய பூசைகள் செய்யவும் ஒழுங்கு செய்தார்.

பொன்னம்பல முதலியார் கொழும்பிலுள்ள கொச்சிக்கடையில் கருங்கல்லால் பொன்ன பலவாணேஸ்வரர் ஆலயம் அமைக்கமுயன்றார். ஆலயம் கட்டிய குறையைத் தாமே எவரின் உதவியும் துணையுமின்றித் தந்தையாரின் இலட்சியத்திற் கேற்பக் கருங்கற்களால் இந்தியச் சிற்பிகளை கொண்டு கட்டுவித்தார்.

### தமிழ் சைவப் பிரசாரம்

சேர்பொன் இராமநாதன் அவர்களிடம் கோடிக் கணக்கின் மேலாகப் பொன், பொருள், நிலம் முதலியன குவிந்திருந்தன. 'இவ்வுடலைத்தந்த பரமேஸ்வரனே இச்செல்வத்தையும் ஈட்டித் தந்தார். அதனால் இச்செல்வம் பரமேஸ்வரனுடையது, அவனது பணிக்கே இவை யாவும் என்று எப்போதும்' கூறுவார்.

சேர்பொன். இராமநாதன் நாவலர் அவர்களின் வழியை அடியொற்றிச் சைவத்தை மூச்சாகவும் தமிழைப் பேச்சாகவும் கொண்டு கருங்கடல் கடந்து சென்று சைவப் பிரசங்கங்கள் செய்தார். ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கீழைத்தேய நாடுகள் எங்கும் சென்று கணீரெனும் மணிக்குரலால் சைவசமயப் பிரசங்கங்கள் செய்து புறச்சமய மக்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்டார்.

சேர்பொன் இராமநாதன் வைத்திருந்த மாபெரும் நூல் நிலையத்தில் இல்லாத நூல்கள் இல்லை,தமிழ் சமஸ்கிருதம்,கிரேக்கம், ஆங்கிலமென உலகிலுள்ள எல்லா மொழிகளிலும்,எல்லா இனமத நூல்களும் காணப்பட்டன.

நாடாளுமன்றமுன்றிலிலும், இராமநாதன் கல்லூரி முன்றிலிலும் சேர்பொன் இராமநாதன் பொற்சிலை காணப்படுவதுடன், கொழும்பு கொச்சிக்கடையிலும் யாழ்ப்பாணத்திலும் சேர்பொன் இராமநாதன் நெடும்வீதிகள் உண்டு.

இராமநாதன் அவர்கள் 1851-1930 வரை உயிர் வாழ்ந்தார். ஆனால் அவர்களுடைய புகழ் உலகமுள்ளளவும நிலை நிற்கவும்,போற்றவும் அன்னாரின் சீரிய தெய்வீகப் பணிகளே காரணமாகும்தனக்கென இம்மியளவு நேரமும் வாழாது நொந்த ஏழை மக்களுக்காக, படிக்கும் மாணவர்க்காக, முதியோர் தொடக்கம் சிறுவர் வரையுள்ள, மக்களின் ஆத்மீக வாழ்விற்காக,வழிகாட்டிய சேர்பொன். இராமநாதன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் ஆவார்.

## தினசரி தியானம்

## செல்வமும் வறுமையும்

அறியாமையே வறுமைக்குக் காரணம், அழியாததும், குறையாததுமான செல்வம் ஆன்மீகமாகிய, செல்வமே, எந்தக் கொள்ளைக்காரனும் இதைக் கொள்ளை அடிக்க முடியாது. கந்தையை உடுத்திக் கொண்டும், உண்ண எதுவும் இல்லாமலும் இருப்பவரிடமும் இச் செல்வம் இருக்குமானால், மூவுலகங்களிலும் அவரே மிகப் பெரிய செல்வந்தர் ஆவார். அவர் அரசருள் அரசராவார், மற்ற செல்வர்கள் அனைவரும் நிச்சயமாக ஏழைகளே, அவர்கள் ஜடப் பொருள்களுக்கு உரிமையானவர்கள் என்றாலும் ஏழைகளே. ஆகவே ஆன்மீகச் செல்வராகுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## வலம்புரி

## தென்பகுதி மாணவர்களின் யாழ். வருகை

தென்னிலங்கை மாணவர்கள், சமாதானச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளனர். தென்னிலங்கையிலிருந்து இருபத்திரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த ஒன்பதாம், பத்தாம்தர மாணவர்கள் இச்சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர்.

புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜயவர்த்தனாவின் ஏற்பாட்டில் இடம்பெறுகின்ற மாணவர்களின் சுற்றுலா தென்பகுதி மாணவர்கள் வடபகுதி மாணவர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளபபடுகிறது.

ஒருகாலத்தில் சிங்களவாகளென்றால் அவர்கள் தமிழர்களின் எதிரிகள் எனவும், தமிழர்களென்றால் அவர்கள் சிங்களவர்களின் எதிரிகள் எனவும் போதிக்கப்பட்டிருந்தது. இப்போதனையின்அனுபவிப்பே கடந்த இருபது வருடகாலயுத்தமாகும்.

சிங்களவர்கள் ஆளப்பிறந்தவர்கள். தமிழர்கள் அடிமைகள்என்ற இனவாதப்போதனை வாழவேண்டிய மனித உயிர்களை அநியாயமாக அழித்துவிட்டது.

இத்தகைய நிலைமை மாறவேண்டுமாயின் வருங்காலச் சந்ததிகளிடையே இனஒற்றுமையை வளர்த்தெடுப்பது அவசியமாகும்.

அழகிய இலங்கைத்தீவு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமானதுஎன்ற உணர்வு மூவின மக்களிடையேயும ஏற்படவேண்டும். ''நமது நாடு'' என்றஉணர்நிலை மூவின மக்களிடமும எப்போது முழுமைபெறுகிறதோ அன்றுதான் இனயுத்தம்என்ற கொடுமை இந்நாட்டைவிட்டு துரத்தப்படும். இத்தகைய உயர்ந்த மனப் பக்குவத்தை மாணவ சமூகத்திடமே ஏற்படுத்தவேண்டும்.

இதற்கு தென்பகுதி மாணவர்களின் யாழ்வருகை நிச்சயமாக உதவும் நாம் எல்லோரும் ஒரு தாய்வயிற்று மக்கள் என்ற மனப்பதிவை ஏற்படுத்துவதற்கு இதுவே தகுந்தவழியாகும்.

## போதைப் பொருள் வர்த்தகரின் சகாக்கள் கைது

(கொழும்பு)

போதைப் பொருள் வர்த்தகத்தில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும்வர்த்தகர் ஒருவரின் வெள்ளவத்தை வீட்டில் இருந்து 11 இலட்சம் ரூபா பணத்தினை போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த சோதனை நடவடிக்கையின் போது முக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்ட நபருடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் மற்றுமொருவர் புறக்கோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். (உ-4)

### புலிகளின்..

ஆனந்தராஜாவிற்கு எதிராக ஒரு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இருக்கின்றோம். பீனல் கோட் சட்டத்தின் 104வது பிரிவின் படி இலங்கை மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட வே.பிரபாகரனை சந்தித்த அமைச்சர்கள், பிரபாகரனின் பேச்சுக்களை ஒலி,ஒளி பரப்பிய நிறுவனங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும் பிரபாகரனின் இருப்பிடங்கள் தெரிந்தே உள்ளன.

இதனால் இவர்களைக் கைது செய்வதில் எந்தச் சிக்கல்களும் இருக்கப் போவதில்லை.

மட்டக்களப்பில் 600 பொலிஸார் கொல்லப்பட்ட போது பொலிஸ்மா அதிபராக இப்போது பதவி வகிக்கும் ஆனந்தராஜா மட்டக்களப்பிலேயே கடமை புரிந்தார் என்றும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் குற்றம் சாட்டியுள்ளார்.(த)

### தென்பகுதி...

பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்துவதுடன், இன்று நயினாதீவுக்கும் செல்லவுள்ளனர்.இம் மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள 22 பாடசாலைகளில் தங்கியுள்ளனர். (த-7)


**COOL LAMINATING**

நினைவு மலர்க் கவர்கள் ரூபா 1.50க்கு Laminating செய்து கொடுக்கப்படும்

உ

பிள்ளையார் அச்சகம்

A Graphic Arts Industry

நல்லூர்

[c5376]


### வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

வன்னி நிர்வாக வெற்றிடங்களுக்கு பணிபுரிய விருப்பமுள்ள வணிகமாணி,முகாமைத்துவ மாணி,உயர் தேசிய கணக்கியல் டிப்புளோமா,உயர் தேசிய வணிக டிப்புளோமா,கணக்கியலும் நிதிமாணி, பட்டதாரிகள் தமது சுயவிபரக் கோவையுடன் நாளை(01.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குத் திருநெல்வேலியிலுள்ள எமது சங்க அலுவலகத்தில் சமூகம் தரவும். அத்துடன் தொழில் அமைச்சின் தொழில் வாய்ப்பு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யாதவர்கள் ஞாயிற்றுக்கிழமை விண்ணப்பப்படிவத்தை எடுத்துப் பூர்த்தி செய்யலாம்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி (6260)

வே.மணிமாறன்.
தலைவர்.

### அரசியல்..

அவர்கள் முன்னிலையில் உரையாற்றிய அமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ ஜனநாயக அரசியல் மாற்றுக் கருத்துக்களின் அவசியம் குறித்தோ, சகவாழ்விற்கு சகிப்புத் தன்மையின் தேவை குறித்தோ ஒரு சொல் தானும் குறிப்பிடவில்லை. மாறாக ஜனநாயகத்திற்கு விரோதமான கோரிக்கையோடு குழப்பத்தை ஏற்படுத்துபவர்களுக்கு உற்சாகம் ஊட்டும வகையிலேயே கருத்துத்தெரிவித்துள்ளனர். எனவும் ஜெகன் குறிப்பிட்டார்.

இதேவேளை பத்திரிகை சிலவற்றில் வெளியான சில தகவல்கள் பற்றிக் குறிப்பிடுகையில் கட்சி உறுபபினர்களில் ஒரு சிலர் ஏதாவது தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் அதற்காக கட்சி முழுவதையும் குறை கூற முடியாதெனவும், கட்சியின் கொள்கை மற்றும் செயற்திட்டம் என்பவற்றைக் கொண்டே கட்சியை மதிப்பிடவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (ந)

### யாழ்.செயலக...

டிசம்பர் மாதம் 10ம் திகதி யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம்முன்பாக காணமற் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் கறுப்புப் பட்டியணிந்து மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இம் மறியற் போராட்டங்களுக்கு சகல அரசியற்கட்சிகள், மனித நேய அமைப்புக்கள், வெகுஜன அமைப்புக்கள்,கடற்றொழிலாளர் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புக்களின் ஒத்துழைப்பை நாடிநிற்பதாக சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)




**சுயமாகத் தொழில் செய்யுங்கள்**

வீட்டில் இருந்து குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து மிகக்குறைந்த முதலீட்டில் இயந்திரம் இல்லாமல் செய்யக் கூடிய நல்ல கைத்தொழில் ஸ்கிரீன் பிரிண்டிங். இந்தத் தொழிலை கொழும்பில் பயின்று இன்று உயர்ந்த நிலையில் தொழில் செய்து வருகின்றனர்.

யாழ். நகரில் உள்ள தமிழ் மக்களுக்கும் இந்தக் கலைத் தொழிலை கற்றுக் கொடுக்க தென்தமிழகத்திலிருந்து R.பரதன் (அச்சுக்கலை நிபுணர்) யாழ். நகருக்கு வருகைதந்துள்ளார். இந்தத் தொழில் பற்றிய முழு விபரம், இதன் பயன் பற்றிய விளக்கம் தேவைப்படுவோர் இலவசமாக நேரில் வந்து சந்தித்து பின்பு பயிற்சியில் சேரலாம். பயிற்சி மூன்று நாள்கள் மட்டுமே. பயிற்சிக்குப் பின்பு தொழில் தொடங்கலாம். சான்றிதழ் வழங்கப்படும். இந்தத் தொழில் செய்வதன் மூலம்,

பிளாஸ்டிக் பேனா, தகரம், துணிவகைகள், பேனர், பில்புக், நோட்டீஸ், போஸ்ரர், திருமண அழைப்பிதழ், முதலியன பிரிண்டிங் செய்யலாம். இந்த அரிய வாய்ப்பை யாழ். நகரமக்கள் பயன்படுத்திக் கொள்ளவும். பயிற்சியில் வயது வரம்பு தேவையில்லை.




இறுதிப்பிரிவு
02.12.2002 இல்
ஆரம்பம்

நேரில் தொடர்பு முகவரி:-

**CAREER.COM INSTITUTE**

79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.தொலைபேசி:- 0777 706334

**சான்றிதழ் வழங்கல்**

ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு


### தகவல் தரவும்

### நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவ

மேற்படி கோவிலில் பிரதிட்டைசெய்யப்பட்டிருந்த மகா வி... விக்கிரகம் (ஐம்பொன்) நேற்று முன் தினமிரவு களவா... டுள்ளது. இது பற்றி தகவல் அறிந்தால் உடனடியாக ... நிர்வாகத்தினருக்கு அறியத்தரவும்.

T.P 070 - 212583 — ஆலய நிர்வாகத்தினர் —



### நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநர் ச... 2003

மேற்படி கோவிலுக்கு 2003ம் ஆண்டிற்கான வழிபடுநர் உறுப்பினர்களாக சேர விரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பு... காணும் தகைமையுள்ள சகல வழிபடுநர்களும் தமக்... வருடாந்த அங்கத்துவப் பணத்தை "பொருளாளர் ஸ்ரீ நாக... அம்மன் கோவில் நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட... கட்டளையாகவோ அல்லது தபாற்கட்டளை ஆகவோ ... விண்ணப்பத்துடன் சேர்த்து 2002ம் ஆண்டு மார்கழி மாதம் 31... (31.12.2002)மாலை 5மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக "செய... ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் நயினாதீவு" என்ற முகவரி... கடிதமூலம் அனுப்புமாறு அல்லது கோவில் அறங்காவலர் ... காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்... போடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்ப... அடங்கிய கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் வழி... சபை உறுப்புரிமை விண்ணப்பம்எனக் குறிப்பிடப்படல் வேண்டு... வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்.

1. அ. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயது... மேற்பட்டவராகவும்.
   ஆ. இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்.
   இ. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் வழிபடுநராக...
   ஈ. இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும்ஒரு... அங்கத்தவராக இருக்கத் தகுதியுடையவர். ஆனால் அப்படி... ஒருவர்
2. அ. தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடை பெறும் நா... கால நித்திய பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அல்...
   ஆ. தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ... திருவிழாக்கள் உட்பட்ட எந்தஒரு விஷேட நைமித்திய உ... பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்... ஒருவரும் மேற்கூறிய நித்திய,விஷேட நைமித்திய பூசை... திருவிழாக்கள், மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அத... மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினரா... வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரிமை 2(அ)அல்லது (... கூற்றின் படி அக் குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரை தேர்ந்தெடுத்து அவ... வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒரு... வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/-) செலுத்தலாம் அத்தகைமையற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரி... (அ) அல்லது (ஆ) வின்படி.
   இ. தமது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பண... ரூபா ஐம்பது (50/-) "பொருளாளர் ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோ... நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளை... கவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று அனுப்பப்பட... வேண்டும்

அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்த... குற்றத்திற்காக எந்தஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவரா... இக் கோவிலில் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனா... அல்லது கொடுப்பனவுகள் பெறாத ஒருவராகவும் இக் கோவி... இலாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றை செ... கொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான், இ... மதகுரு, இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராம சே... உத்தியோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூ... அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துப... பெயர், பதவிக்கான இறபர் முத்திரை இடப்படாத விண்ணப்ப... ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ரூபா 5 /-செலுத்தி உரிய விண்ண... படிவத்தை கோவில் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

## சான்றிதழ் வழங்கல்

ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி முடித்த மாணவர்களுக்கான
சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

இடம்: நாவலர் மண்டபம்.

காலம்: 05.12.2002. வியாழக்கிழமை பி.ப.2.00மணி

இந் நிகழ்விற்கு பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

(C/5375)

குறிப்பு:–

விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதவான், இ
மதகுரு, இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராம சே
உத்தியோகத்தர் அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூ
அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துப
பெயர், பதவிக்கான இறபர் முத்திரை இடப்படாத விண்ணப்ப
ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ரூபா 5 /-செலுத்தி உரிய விண்ண
படிவத்தை கோவில் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி

அன்னையின் சேவையில்

கனக. உருத்திரகுமாரன். B.A

கௌரவ செயலாளர்

அறங்காவலர் சபை

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்.

நயினாதீவு.

[C/5372]


மீண்டும் சாவகச்சேரியில்



புதுப் பொலிவுடன்

நியூ வி. எம். கே. ஜுவலர்ஸ்



15, நவீன சந்தை கண்டி வீதி, சாவகச்சேரி

T.Phone: 070 - 212989, 0777 - 723021



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 30.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்ப